மன்றம்

வார ஏடு

ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ.

மலர் 6—இதழ் 28 ★ 10-11-57. சென்னை ★ விலை 16 காசு

காகிதப்பூ மணக்குமா?

காகிதப் பூ மணக்குமா?

காங்கிரஸ் சமதர்மம் இனிக்குமா?

தேர்தல் காலத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் வெளியிட்ட அறிவிப்புகளில் ஒன்று!

சமதர்ம முறையில் இந்தியப் பொருளாதாரத்தை அமைக்க வேண்டுமென்று ஆவடிக் காங்கிரசில் தீர்மானம் போட்டதிலிருந்து, காங்கிரஸ் எல்லாவற்றையும் "சமதர்மப் போக்கிலேயே" பேசினார்கள்! எந்தக் காரியத்தைப் பேசினாலும், அதற்கு ஒரு "சமதர்ம முலாம்" பூச்சுக் கொடுத்தார்கள்!

உற்பத்தி அதிகரிக்க வேண்டுமா? அதைச் சமதர்ம முறையில் கவனிக்கப் போகிறோம்!

உணவு நெருக்கடியா? அதையும் சமதர்ம அடிப்படையில் பார்க்கப்போகிறோம்!

நிலச் சீர்திருத்தமா? அதைச் சமதர்ம அடிப்படையில் செய்யவேண்டும்!

ஐந்தாண்டுத் திட்டமா! சமதர்ம முறையில் அதைப் போட்டிருக்கிறோம்!

இவ்வாறு தாங்கள் செய்கின்ற ஒவ்வொரு காரியத்திற்கும் "சமதர்ம முறை" என்ற லேபிளை ஒட்டிவந்தார்கள்! சமதர்ம முறையில் அதை அவர்கள் செய்யவில்லை, உண்மையில் சமதர்மம் என்றாலே என்னவென்றே புரிந்து கொள்ளாத—புரிந்து கொண்டும் உள்ளூர ஒத்துக்கொள்ளாத பலர் "சமதர்ம முறையை" எல்லா செயல்களிலும் போட்டுக் கொண்டார்கள்!

"சமதர்ம முறை"யில் அவர்களுக்கு நம்பிக்கைக் கிடையாது. சமதர்ம முறை என்ற லேபிள் ஒட்டப்பட்டால் மார்க்கெட்டில் சாமான் சுலபத்தில் விலைபோகும் என்ற நம்பிக்கையில் அவர்கள் அப்படிச் செய்தார்கள்!

அதிலும் தேர்தல் காலத்தில் "காங்கிரஸ் சமதர்ம முறைக்கு" அதிகக் கிராக்கி வந்தது. காங்கிரஸ் சமதர்ம முறையைப் பாராட்ட பரோடா மன்னரும், குவாலியார் மகாராணியும், ராஜா சர் முத்தையா செட்டியாரும், ஜமீன்தார்களும் மிட்டாதார்களும் ஓடோடி வந்தார்களென்றால், அந்த லேபிளுக்கு எவ்வளவு மகத்துவம் இருந்திருக்க வேண்டும்!

"சமதர்ம முறை" லேபிள் நல்ல இலாபம் தரும், என்ற உண்மையை டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் இவர்களுக்கெல்லாம் முன்னதாகத் தெரிந்து வைத்திருந்தார். அவர் நல்ல வியாபாரியல்லவா! வியாபார மார்க்கெட்டில் எவ்வளவு அனுபவம் அவருக்கு! எங்கே இலாபம் கிடைக்கும் என்பதை மோப்பம் பிடித்து அறியும் சக்தி அவருக்கு இருக்கிறதல்லவா? காங்கிரஸ்காரர்கள் போராட்டங்களை நடத்தி, மண்டைகள் உடைந்து சிறைச்சாலைக்கும் ஆஸ்பத்திரிக்கும் போய்க்கொண்டிருந்த சமயத்தில், வெள்ளைக்காரக் கம்பெனிகளின் சோப்புகளுக்கு இந்தியாவில் நல்ல கிராக்கி இருக்கிறது என்பதைத் தெரிந்து, நாட்டில் எந்த அமளி நடைபெற்றாலும் நமது வியாபாரத்தை நாம் பார்ப்போம் என்ற ஒழுங்கு உணர்ச்சியுடன் சோப்பு வியாபாரத்தில் ஏராளமாக இலாபம் சம்பாதித்தார்!

பிறகு காங்கிரசுக்கு மார்க்கெட் கிடைத்ததும், டி. டி. கேயும் தமது வியாபாரத்தை மாற்றிக்கொண்டார். லிவர் பிரதர்ஸ் முத்திரையை ஒரு புறத்தில் வைத்துவிட்டு காங்கிரஸ் முத்திரையைக் குத்திக்கொண்டு உள்ளே புகுந்தார்! மார்க்கெட்டில் யார் யாரைப் பிடித்தால், எந்தெந்தத் தரகரைப் பயன் படுத்தினால், இலாபம் கிடைக்கும் என்ற வியாபார புத்திசாலித்தனத்தை,

★ இரா. செழியன் ★

அரசியல் மார்க்கெட்டில் பிரயோகித்தார். பாராளு மன்றத்தில் இடங் கிடைத்தது, மந்திரி சபையில் இடங்கிடைத்தது, கடைசியாக நிதிமந்திரியாகவும் ஆகிவிட்டார்!

எவ்வளவோ நாட்டுப் பற்றுடையவர்கள்—தியாகிகள்—பொருளாதார நிபுணர்கள் இருக்கிறார்கள், அவர்களையெல்லாம் இருந்த இடம் தெரியாமல் போகச் செய்து,

தமது வியாபார தந்திரத்தால், ...
இடத்தைப் பிடித்துக் கொண்டார்...

நல்ல மணமுள்ள மலர்கள் இ...
கின்றன, இருந்தும் வர்ணம் ...
பட்ட காகித மலருக்கு முதலி...
கொடுக்கப்பட்டு விட்டது!

டி. டி. கே "சமதர்ம முறை...
எவ்வளவுதான், ஆதரித்த பே...
லும், அவருடைய இயல்பான கு...
போகவில்லை! அந்த இயல்பான கு...
அமெரிக்காவில் நன்றாக வெளிப்ப...
விட்டது!

ஐந்தாண்டுத் திட்டத்திற்குப் பண...
கிடைக்கவில்லை என்றதும், குபேர...
நாடான அமெரிக்காவிலிரு...
பணத்தை அள்ளி வரும்படி கிருஷ்...
மாச்சாரியாரை அனுப்பினார்க...
வெளிநாட்டாரிடம் நல்ல முறை...
பேரம் பேசி, பணம் வாங்கிவருவ...
சாமர்த்தியசாலி என்று நினைத்...
என்னவோ கிருஷ்ணமாச்சாரியா...

இந்திய அரசாங்கம் அனுப்பியது...
இங்கெல்லாம் "சமதர்மம்" "சமத...
முறை" "சமதர்மத் திட்டம்" எ...
றெல்லாம் பேசிய போதிலும், அமெ...
ரிக்காபோனதும்சுருதியேமாறிவிட்ட...
அமெரிக்க முதலாளிகளைத் திருப்...
படுத்த, சமதர்ம நோக்கத்தை எ...
லாம் காற்றில் பறக்கவிட்டு, ஒரு மு...
லாளி பேசுவதையும் மிஞ்சுமளவு...
டி. டி. கே. பேசினார்; "அமெரிக்கா உ...
வினால் தப்பினோம், இல்லையென்ற...
இந்தியா முழுவதும் பொதுவுடை...
நாடாகிவிடும்" என்று எச்சரித்தா...
"இனிமேல் எந்தத் தொழிலை...
தேசிய மயமாக்கமாட்டோம்" என்...
கைமேல் அடித்துச் சத்தியம் செ...
தார். அமெரிக்க முதலாளிகள் பி...
யத்தைச் சம்பாதிக்க என்னென்வோ...
லாமோ செய்து பார்த்தார்! எதிரி...
நின்று தோப்புக் கரணம் போடாத...
ஒன்றுதான் பாக்கி! ஆனால் பாவ...
இவர் கேட்டதில் நாய்ப்பைசாகூ...
கிடைக்கவில்லை!

கடன் கிடைக்காதது மட்டுமல்ல...
"இவர் அமெரிக்காவில் இப்படிப் பே...
லாமா!" என்பதைப் பற்றிப் பலமா...
கண்டனம் இந்தியாவிலுண்டுள்ளது...

குளிக்கப்போய்ச் சேற்றைப் பூ...
வந்த கதை! தேர்தலில் இவருக்...
இருந்த சின்னம் காளைமாடு! அமெரி...
காவுக்குப் போகும்பொழுது ஜல்லி...
கட்டு காளைமாதிரி மிடுக்குடன் சென்...
றார், திரும்பி வரும்பொழுது சேற்றி...
புரண்டு வந்த எருமைமாடு மாதி...
இருக்கிறது!

ஒரு பொய்யை மறைக்க ஒன்ப...
பொய் என்று ஒரு பழமொழியிரு...
கிறது! அமெரிக்காவில் இவர் பேசி...
யது முதல் தவறு, அந்தத் தவறை...
மறைக்க, இப்பொழுது "நான் சொல்...
யதை அமெரிக்கப் பத்திரிக்கைச் ச...
யாகப் பிரசுரிக்கவில்லை" என்று கூ...
தப்பிக்கப் பார்க்கிறார். அமெரிக்கா...
வில் உள்ள "நியூ யார்க் டைம்ஸ்" என்...
பத்திரிக்கையில் நிருபர் ரோசன்தால் என...
பவர்தான் டி. டி. கேயைப் பேட்...
கண்டு, அவர் சொல்லியதை வெளி...
யிட்டார். தாம் சொல்லியது சரியாகப்...
பிரசுரிக்கப்படவில்லை என டி. டி. கே...
இந்தியாவில் அறிவித்துள்ளதை...
கேள்விப்பட்ட அந்தப் பத்திரிகை...

(12-ம் பக்கம் பார்க்க)

தலைவி.

காணும் இன்பமே போதும்!

ஆ. ...

நீர்வளமும் நிலவளமும் ம்பிய நாட்டுக்கு அவன் லைவனாக இருந்து வருகிறான். ங்கணும் பரந்து காணப்படும் லையும் மடுவும், வயலும் வெளியும், குளமும் குட்டை ம் அவனுக்கு உரிமையுடை னவாகும்.

பார்க்குமிடந்தோறும் இயற் கையழகு கொஞ்சி விளையாடு றது. பொய்கையில் அல்லி சழித்து வளர்ந்து செறிந்து டக்கின்றது. அல்லியின் லைகள் யானையின் காது பால் அகன்று அழகுற நீரில் டிந்துகிடக்கின்றன. அல்லி மாட்டுக்கள் கொக்கின் தலை பால் உயர்ந்து கூம்பிக் ாணப்படுகின்றன. அல்லித் ண்டுகள் கொக்கின் கழுத்து பால் காட்சியளிக்கின்றன. அல்லியின் நறுமணம் சூழ்நிலை ளைக் கமழ வைத்துக் கொண் ருக்கிறது. கீழ்த்திசையில் டியற் காலையில் தோன்றும் டிவெள்ளி போன்ற வெண் மையையும் ஒளியையும் உடைய யல் மீன்களின் கூட்டம் அங் மிங்கும் துள்ளிக் குதித்துக் ாண்போர்க்கு இன்பம் பயக் ின்றது.

இப்படிப்பட்ட அழகிய பொய்கையின் அருகில்தான் அந்தப் பகுதிக்கு உரியவனான தலைவனும், அடுத்த ஊரைச் சார்ந்த அழகே உருவெடுத்த தலைவியும் அடிக்கடி மாலைப் பொழுதிலும், இரவிலும் ஒருவரையொருவர் கண்டு களவொழுக்கக் காதலின்பம் பெற்று வருகின்றனர். சிறிது நாட்களில் இருவரும் முறைப்படி திருமணம் செய்துகொண்டு இல்லறவாழ்வை இனிது நடத்தி வருகின்றனர்.

தலைவனுக்குப் பாணன் ஒருவன் நண்பனாகிறான். அவன் தலைவனிடம் பரத்தையின்பால் பெறப்படும் இன்பத்தைப் பற்றிப் பலவாறாகப் புகழ்ந்து கூறுகிறான். தலைவன் மெல்ல மெல்ல மன மயக்கங்கொண்டு பரத்தையிடம் காம இன்பம் பெற ஆவல் கொள்கிறான். தன் இல்லக்கிழத்தியிடம் பெறும் இன்பத்தைவிடப் பரத்தையிடம் பெறும் இன்பம பெரிதாக இருக்கும் என்று எண்ணி எண்ணி, அந்த எண்ணத்தில் தோய்ந்துவிடுகிறான். ஒருநாள் தலைவிக்குத் தெரியாமல் பாணனோடு பரத்தை இல்லத்திற்குப் புறப்பட்டுப் போய்விடுகிறான்.

பரத்தை தலைவனின் பொருளை விரும்பி, அவனுடைய முழுப்பொருளையும் கவர்ந்துவிட எண்ணி, அவனிடம் அளவிற்கு மீறிய அன்பு காட்டி அவனைப் பேணிப்பாராட்டிவருகிறாள். தலைவன் பரத்தையின் அன்பிலும், பணிவிடைகளிலும் மயங்கி தன் இல்லத்தை மறந்து வாழ்ந்து வருகிறான்.

தலைவி தலைவனைக்காணாது வருந்தி, பலரையும் கொண்டு பல இடங்களிலும் தேடிப்பார்க்கச்செய்து, எங்கும் காணாது திகைத்துப், பின் பரத்தையர் சேரியில் அவன் வாழ்வது அறிந்து, வருத்தத்தையும் துயரத்தையும் உள்ளுக்குள்ளேயே அடக்கிக்கொண்டு, இல்லறங்களை இனிது நிறைவேற்றிக்கொண்டு வருகிறாள்.

தலைவனின் கைப்பொருள் முழுவதையும் கவர்ந்து கொண்டான பிறகு, பரத்தை அவனைத் துரத்தியடித்துவிடுகிறாள். பணம், மானம், ஒழுக்கம், உயர்வு முதலிய எல்லாவற்றையும் இழந்துவிட்ட தலைவன் தன் நிலைக்குப் பெரிதும் வருந்தித் தன் இல்லாளிடத்துச் செல்வத்தைத் தவிர வேறுவழியின்றி மெல்ல வீடு நோக்கி வருகிறான்.

தலைவி முற்றத்தில் உட்கார்ந்து தோழியோடு உரையாடிக்கொண்டிருக்கிறாள். அப்பொழுது தலைவன் அடக்க ஒடுக்கமாய் யாதும் பேசாமல் தலைவியின் எதிரில் வந்து நிற்கிறான். தலைவன் தன் எதிரே வந்து நிற்பதையறிந்த தலைவி, திடுக்கிட்டு எழுந்து, வெகுண்டு "இவர் இங்கே ஏன் வந்தாராம்? இவர் வரவேண்டிய இடம் இது அல்லவே! அது பரத்தையர் சேரியிலல்லவா அழகுற அமைந்திருக்கிறது! அங்கே போக வேண்டியவர் இங்கே ஏன் வந்தாராம்! அங்கேயே போகச் சொல்லு!'' என்று தோழியைப் பார்த்துக் கூறுகிறாள்.

"இங்கே ஏன் வந்தீர்கள்?'' என்று தோழி தலைவனைப் பார்த்துக் கேட்கிறாள்,

"என் அருமைக் காதலியைத் தலைவியைக் காண ஓடோடியும் வந்துள்ளேன்!'' என்று தலைவன் அடக்க ஒடுக்கமாய்க் கூறுகிறான்.

அது கேட்ட தலைவி "ஓகோ! இப்பொழுதுதான் அருமை தெரிகிறதோ? அந்த அருமை அப்பொழுது எங்கே போயிற்றாம்?'' என்று சினத்தொடு கேட்கிறாள்.

"அந்த அருமை அப்போது எங்கே போயிற்று?'' என்று தோழி தலைவனிடம் ஏளனமாகக் கேட்கிறாள்.

"அப்பொழுது நான் அறியாமையால் போய்விட்டேன்! என்னை நீங்களிருவரும் மன்னித்து விடுங்கள்! இனியொரு தடவை இந்தத் தவற்றைச் செய்யமாட்டேன்'' என்று தலைவன் கூறுகிறான்.

"இனியொருதடவை இந்தத் தவற்றைச் செய்ய வேண்டிய இன்றியமையாமை ஏற்படாமல், இந்தத் தவற்றோடு தொடர்ந்து பரத்தையர் சேரியிலேயே வாழ்ந்திருக்கலாமே! இங்கு வரவேண்டியதுமில்லை; இனியொருதடவை தவறு ஏற்படுமோ என்று எதிர்பார்த்து அஞ்சவேண்டியதுமில்லையே !'' என்று தலைவி கூறுகிறாள்,

"எப்படியேனும் என்னை மன்னித்து மனம்விரும்பி ஏற்றுக் கொள்ள வேண்டுகிறேன். அதுதான் நான் வேண்டுவதெல்லாம்!'' என்கிறான் தலைவன்.

"இவரை மனம் விரும்பி ஏற்றுக் கொள்ளத்தான் பரத்தையர் சேரியில் ஒருத்தி இருக்கிறாளே! மனம் வெகுண்டு இருக்கும் நான் ஏன் ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று எதிர்பார்க்கிறாராம்?'' என்று தலைவி தோழியைப் பார்த்துக் கேட்கிறாள்.

தோழி தலைவன்பக்கம் திரும்புவதற்குள், தலைவன் தலைவியைப் பார்த்த வண்ணம் "உன் அன்பைப் பெறவும், உன்னிடம் அன்புகாட்டவுந் தான் வந்திருக்கிறேன்!''

"இவரால் அன்புகாட்டுவதற்குரிய ஒருத்திதான் பரத்தையர் சேரியில் இருக்கிறாளே! அவளுடைய அன்பைப் பெறவும், அவளிடம் அன்பு காட்டவும் மிகவான வாய்ப்பும் வசதியும் இருக்கும்போது, சிடுமூஞ்சியோடு விளங்கும் என்னைத் தேடி வருவானேன்?'' என்று தலைவி சினந்து கூறுகிறாள்.

"உன்னைத்தானே நான் முழுக்க முழுக்கக் காதலித்து வந்தேன்; வருகிறேன்! என்னை நீ புறக்கணிக்கலாமா?'' என்று தலைவன் தலைவியைப் பார்த்துக் கெஞ்சிக் கேட்கிறான்.

"அதெல்லாம் அந்தக் காலம்! நாங்கள் களவொழுக்கத்தில் ஈடுபட்டிருந்தோமே, அந்தக் காலத்தைப் பற்றிச் சொல்கிறார் இவர்! அந்தக் காலம் அடியோடு போயிற்று! இப்பொழுது நான் காதலிக்கத் தக்கவள் அல்லள், கைவிடப் படத்தக்கவளே யாவேன்! இப்பொழுது இவரால் காதலிக்கத் தக்கவள் ஊருக்கு வெளியே வாழுகிறாள்; இங்கில்லை, இவரை அங்கேயே போகச் சொல்லு!'' என்று தலைவி தோழியிடம் கூறுகிறாள்.

"சரி, சரி வந்த வழியே பார்த்துக்கொண்டு போங்கள். இங்கே நிற்காதீர்கள்!'' என்று தோழி தலைவனைப் பார்த்துக் கூறுகிறாள்.

"உன்மீது கொண்ட அன்பால்தானே நான் இங்கு வந்து கெஞ்சுகிறேன்'' என்கிறான் தலைவன்.

"பார்த்தாயாடி வேடிக்கையை! என்மீது கொண்ட அன்பால் இவர் இங்கே வந்திருக்கிறாராம்! கைப்பொருள் இழந்ததனால் இங்கே வந்தாரா அல்லது என்மீது கொண்ட காதலால் இங்கே வந்தாரா? பரத்தையோடு சேர்ந்த பழக்கம் எப்படியெல்லாம் பொய் சொல்ல வைக்கிறது பார்!'' என்கிறாள் தலைவி.

"உன் வருத்தத்தையும், வாட்டத்தையும் போக்கத்தான் நான் இங்கு வந்துள்ளேன்!'' என்கிறான் தலைவன்.

அதுகேட்ட தலைவி "இவரைக் காணுவது ஒன்றே நமக்கு இனிமையாக இருக்கிறது! அதுவே போதும் என்று இவரிடம் சொல்லு! கோடை வெப்பம் தாங்காது வெடித்துக் காணப்படும் வயலிலே வந்து நிறையும் புதுநீர் வெள்ளம் எப்படிக் குளிர்ச்சியை ஊட்டுகிறதோ, அப்படி இவரது காட்சி நமக்கு இனிமையை ஊட்டுகிறது! இந்தக் காட்சி ஒன்றே போதும்! வேறு ஒன்றும் வேண்டாம்! இவர் வீட்டின் கண்ணே நுழையவேண்டாம் என்று சொல்லு!'' என்று சொல்லிவிட்டு வீட்டுக்குள்ளே போய்விடுகிறாள்.

தலைவன் தலையைக் கவிழ்த்துக் கொண்டு நிற்கிறான்.

தோழி தலைவனைப் பார்த்து "நீங்கள் இங்கே ஏன் கால் கடுக்க நின்றுகொண்டிருக்க

(11-ம் பக்கம் பார்க்க)

இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.

மன்றம்

ஞாயிறு 10—11—57 சென்னை

நீதி விசாரணை!

முதுகுளத்தூர் கலவரத்தில் சென்னை அரசாங்கத்தின் போக்கு குறித்து எழுந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் சென்னை சட்டசபையில் நான்கு நாட்கள் விவாதிக்கப்பட்டது. விவாதத்தில் கலந்துகொண்ட பல கட்சிகளும் பலக் கருத்துக்களை வலியுறுத்தினர். ஆட்சியின்பேரில் நம்பிக்கையில்லை என்ற பொதுவான கருத்திலும், எதிர்க் கட்சிகளும் தம்தம் கோட்பாடுகளுக்கும் அரசியல் முறைகளுக்கும் ஏற்ற விதத்தில் பிரச்சினையை ஆராய்ந்திருக்கின்றன. அரசாங்கச் சார்பில் தரப்பட்ட அறிக்கையிலும் பேச்சுகளிலும் ஒன்றுக்கொன்று முரண்பாடு இருந்திருக்கின்றது. சிலசமயம் ஒரு குறிப்பிட்ட அறிக்கையிலேயே முற்பகுதிக்கும் பிற்பகுதிக்கும் முரண்பாடு இருக்கிறது. கலவரத்திற்கான காரணங்களை இருதரப்பிலும் வெகு சுலபமானதாக்க முயன்றிருக்கின்றனர். ஓரிருவர் கூடி தூண்டிவிட்டதாகவோ, அல்லது ஒரு குறிப்பிட்ட வகுப்பினர் முழுவதும் இதனைத் தூண்டிவிட்டனர் என்றோ ஏற்பட்ட விளைவுகளில் சிலவற்றை வைத்துக் காரணங்களைத் தேடியிருக்கின்றனர். எவர் தூண்டியபோதிலும், கலவரத்திற்கான சூழ்நிலை முதுகுளத்தூர் பகுதியில் உருவாகியிருந்திருக்கிறது.

போலீசுமந்திரியின் அறிக்கை ஓரிடத்தில் கலவரம் திடீரென வெடித்ததாகக் கூறுகிறது, மற்றோரிடத்தில் அந்தப்பகுதியில், கலவரத்திற்கான சூழ்நிலை கடந்த இருபது முப்பதாண்டுகளாக வளர்ந்து வந்திருப்பதாகக் கூறுகிறது! மிகப்பிற்போக்கான நிலையில் அந்தப் பகுதி விட்டு வைக்கப்பட்டிருந்ததால், குற்றங்களும் சச்சரவுகளும் மூண்டதாக அமைச்சர் அறிக்கை தெரிவிக்கிறது!

நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் கலந்துகொண்ட திராவிட முன்னேற்றக்கழகம் இரண்டு முக்கிய காரணங்களை முன்வைத்தது. அந்தப் பகுதியை மிகப் பிற்போக்கான நிலைமையில் விட்டுவைத்து, கலவரங்கள் ஏற்படும்படியான சூழ்நிலைகளுக்குக் காரணமாக அரசாங்கமே இருந்ததென்றால், அது கண்டிக்கத்தக்கது. அந்த வகையில் ஆட்சிப்பொறுப்பில் இருந்தவர்கள்மீது நம்பிக்கை இல்லை எனத் தெரிவிக்கப்பட்டது. இரண்டாவதாக, கலவரமான சூழ்நிலை இருப்பது முன்கூட்டியே தெரிந்திருந்தும், அதைத் தடுத்து அமைதியை நிலைநாட்டும் பொறுப்பு இல்லாமல், இரண்டு வகுப்பினரிடையே தீராத பகை மூளும்படி ஆட்சியாளர் விட்டுவிட்டது பெருங்குறை. இந்தத் தவறான போக்கு குறித்தும் ஆட்சியாளர்மீது நம்பிக்கை இல்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

மேலும் திராவிட முன்னேற்றக் கழகம் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் முக்கிய நோக்கமாகக் கொண்டிருந்தது, இராமனாதபுரத்தில் மூண்ட கலவரத்தைக் குறித்தும் நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகங்களைக் குறித்தும் ஒரு நீதிவிசாரணை ஏற்படுத்தவேண்டும் என்பதாகும். இந்த முக்கிய நோக்கத்தை வலியுறுத்தியே அறிஞர் அண்ணா அவர்களும் சட்டசபையில் பேசினார்.

நீதி விசாரணை வேண்டும் என்ற கருத்தை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளாதது வருந்தத்தக்கது. ஒருவேளை நீதி தங்கள் பக்கம் இருக்காது என்று நினைத்தார்களோ அல்லது எதிர்வரிசையிலிருக்கும் இவர்கள் சொல்லி நாம் வே பதா என்று கருதினார்களோ தெரியவில்லை, நீதி விசார வைக்கவேண்டுமென்ற திராவிட முன்னேற்றக்கழகத் கோரிக்கையை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவில்லை.

காங்கிரசாட்சியில் துப்பாக்கிப் பிரயோகங்கள் சா சாதாரணமாகிவிட்டன. எடுத்ததெற்கெல்லாம் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்படுகிறது. வெள்ளைக்கார காலத்தில் இருந்ததைவிட அதிகமான அளவு, எண்ணிக்கையிலும் வெறித்தன்மையிலும், அகிம்சா மூர்த்திகளா காங்கிரசுக்காரர்களின் கடந்த பத்தாண்டு ஆட்சிக்கால தில் துப்பாக்கிப் பிரயோகங்கள் நடைபெற்றிருக்கின்றன. வெள்ளைக்காரன் காலத்தில் கூட்டத்தைக் கலைப்பதற்கா —கூட்டத்தைக் கலைந்துபோகுமாறு பயமுறுத்த ஆ யத்தை நோக்கிச் சுட்டார்கள் (Shoot to Scare). இ அகிம்சா மூர்த்திகளின் ஆட்சியில் "பயமுறுத்தச் சுடு என்பது போய், "கொல்வதற்காகச் சுடு" (Shoot to Kil என்று ஏற்பட்டுவிட்டது.

முதுகுளத்தூர் பகுதியில் கலவரம்மூண்டதன் சரியா காரணங்கள் ஆராயப்பட்டு அந்தக் குற்றங்களும் தவறுகளும் திருத்தப்பட்டால்தான், எதிர்காலத்தில் "முதுகுளத்தூர்கள்" ஏற்படாதிருக்கும். அந்தப் பகுதியில் மட் மல்ல, மற்றப் பகுதிகளிலும், பல்வேறு வகுப்பினரு அமைதியுடன் வாழ, முதுகுளத்தூர் மூண்டதற்கான கா ணங்கள் கண்டுபிடிக்கப்படவேண்டும். ஒவ்வொரு தடவையும், வகுப்புக் கலவரங்கள் மூண்டு வெட்டுக்காயங்களுக்கு வேட்டுக் காயங்களுக்கும் பலர் பலி தரப்பட்டபின்னா காரணங்களைக் கூறிச் சமாதானமடைந்துவிடுவது ஆட்சி பொறுப்பிலிருப்பவர்களுக்கு அழகல்ல!

நீதி விசாரணை வேண்டுமென்று திராவிட முன்னேற்றக் கழகம் வலியுறுத்தியதற்கு முக்கிய நோக்கம், மு குளத்தூர் மூண்டதற்கான காரணங்களைக் கண்டுபிடித் யார்யார்மீது பழிபோடலாம், யார்யாரைப் பழிதீர்க்கலா என்பதல்ல; கலவரம் மூண்டதற்கான சரியான காரண கள் தெரிந்தால் அந்தச் சூழ்நிலையை உரியமுறையி மாற்றியமைத்து மேலும் கலவரங்கள் உண்டாகாதவாறு செய்யவேண்டும்.

நோய் வந்தபின் ஆற்றுவது ஒரு முறை, நோய் வரா மல் முன்கூட்டியே தடுத்துவிடுவது அதைவிட நல்ல முறை!

புண் ஏற்பட்டுவிட்டது, அதை ஆற்ற உடனடியாக மருந்திடவேண்டும். புண்ணை ஆற்றுவதற்கு மருந்திட, அந்தப் புண் எந்தக் காரணங்களால் ஏற்பட்டது என்ப தைத் தெரிந்துகொள்ளவேண்டும். இந்தப் புண்ணை ஆற்றுவதுடன், மேற்கொண்டு புண்கள் ஏற்படாதபடி பாதுகாப்பும் கண்காணிப்பும் உண்டாக்கவேண்டும்!

பலமான புண் ஏற்பட்டுவிட்டது என்று கூவிக் கொண்டு, மருந்திடாமல், புண்ணை ஆற்றும் வகை தேடா மல், "இந்த இடத்தில்தான புண், இதுதான் புண்!" எனப் புண்ணைக் கிளறிக் காட்டிக்கொண்டிருப்பதால், இருக்கிற வேதனையை அதிகமாக்குவதாகத்தான் முடியும். அதை விட மோசமானது, இருக்கிற புண்ணைவிட்டு, வேறொரு இடத்தைக் கிளறி புண்படுத்திவிடுவது!

முதுகுளத்தூர் கலவரங்களை ஆராயும்பொழுது, இருக்கும் சூழ்நிலையை மோசமாக்குவதில் அர்த்தமில்லை.

இராமனாதபுரம் மாவட்டத்தில், முன்கூட்டியே கண்காணிப்புடன் அரசாங்கம் இருந்திருந்தால் கலவர நிலைமையைத் தடுத்திருக்கலாம். முன்கூட்டியே தடுக்க அரசாங்கம் தவறிவிட்டது என்பதற்கு அரசாங்கம் தக்க சமாதானம் தந்தாகவேண்டும்.

அதிகாரத்தின் துணைகொண்டு அமைதியை உண்டாக்க முடியாது, அதனால்தான் திராவிட முன்னேற்றக்கழகம் கூறுகிறது, நீதியின் துணைகொண்டு அமைதிக்கு வழி தேடுங்கள் என்று! நீதியின் துணைகொண்டு பார்த்தால் தான், கலவரத்துக்கான சூழ்நிலையையும் காரணங்களையும் நீதி விசாரணை மூலம் கண்டறிந்தால்தான், நிலையான ஒரு அமைதியை அரசாங்கத்தால் உண்டாக்க முடியும்! எனவே, உடனடியாக முதுகுளத்தூர்பற்றி ஒரு நீதி விசாரணையை உண்டாக்க, அரசாங்கம் முன்வருவதாக!

(இ)ந்திக்கு ஆதரவாக "கெபல்ஸ்" முறை

—(o)— இத்தியூர் சின்னையன்,

★

ஜெர்மன் நாட்டில் இட்லர் ...ட்சிக்கு வந்தபொழுது, ...வருக்கு கெபல்ஸ் என்ற பிர...ர மந்திரி கிடைத்தான். இட்...நக்கு ஆதரவாக ஜெர்மன் ...களைச் சேர்ப்பதில் அவன் ...தல் வரிசையில் இருந்தான், ...தற்காக, அவன் பேசாத ...ாய்யில்லை, செய்யாத சூது ...துகள் கிடையாது. எந்தப் ...ாய்யைச் சொல்லியாவது, ...தைச் செய்தாவது, இட்ல...க்கு ஆதரவு திரட்டுவது ...ன அவனுக்கு முக்கிய ...லையாக இருந்தது. பொய் ...ன்றால் என்ன? உண்மை ...ன்றால் என்ன? எது பயன் ...கிறதோ அது தான் வேண்...ம் என்ற முறையில் கெபல்ஸ் ...ஞ்சறிந்த பொய்களை மெய் ...ாலமக்களுக்குச் சொல்வான்; ...ருதடவையல்ல, பலதடவை ...ர் திரும்பத் திரும்பச் சொல்...ான். "ஒரு பொய்யைப் பத்...த் தடவைகள் சொன்னால், ...ந்தப் பொய் உண்மையாக ...கிவிடும்" என்பது கெபல்...ன் சித்தாந்தம்! யுத்த களத்...ல் ஜெர்மன் படைகள் பின்...ாறத்துவங்கிக்கூட கெபல்...ன் பேச்சுகள் தளர்வடையா...ல் இருந்தன. "ஜெர்மன் ...டைகள் மாஸ்கோவைப் ...டித்து விட்டன, இங்கிலாந்து ...ன்னர் சரணடைய நிபந்தனை ...ள் கேட்கிறார், அமெரிக்கப் ...டைகள் தோற்றோடிப் போய் ...ிட்டன. அடுத்த வாரத்தில் ...லக நாடுகள் அனைத்தும் ...ஜர்மனியின் கட்டளைக்கு கீழ்ப் ...டிந்துவிடும். வெற்றி நமதே, ...ஹயில் ஹிட்லர்!" என்று ...ஜர்மன் படைகள் கிழக்கிலும் ...மற்கிலும் செம்மையாக உதை...ட்டு, சின்ன பின்னமாகித் ...ரும்பி வரும் போதுகூட, ...னது பொய்களைக் கூசாமல் ...சால்லி வந்தான். கடைசியில் ...பர்லின் விழுந்தது, பொய்...ளின் மேல் கெபல்ஸ் கட்டிய ...காட்டைகளும் விழுந்தன, ...கபல்சும் இருந்த இடம் தெரி...யாமல் மறைந்தான்!

"ஒரு பொய்யைப் பத்துத் ...தடவைகள் திரும்பத் திரும்பச் ...சொன்னால், அந்தப் பொய் ...மெய்யாகிவிடும்" என்ற ...கெபல்ஸ் தந்திரத்தை, இந்தி...யாவில் இந்திக்கு ஆதரவு ...திரட்டும் சிலர் உபயோகப்படுத்...துகின்றனர். அவர்கள் சொல்...வதற்கு ஆதாரமில்லையென்ற...லும், பல தடவைகள் பலபேர்...களினால் சொல்லப்படுவதால் ...ஒரு பொய்யை மெய்யாக ஆக்கி...விட முயல்கின்றனர். அவ்...வாறு அவர்கள் மெய்யாக—...மெய்யைப்போல ஆக்க விரும்பு...வைகளில் "இந்தியாவில் இந்தி ...பேசுபவர்கள் பெரும்பான்மை...யினர்" என்பதுஒன்றாகும். அது ...உண்மையோ என்று பலரும் ...ஐயுறுமளவுக்கு அந்தக் கற்...பனையை, இந்தி ஆதரவாளர்...கள் கூறிவருகின்றனர்.

பொய்யை மெய்யாக்கும் புதுவேலை

—(o)—

இந்தி அரசாங்க மொழியாக வேண்டும் என்பதற்கு மற்றெந்த வகையிலும் சரியான காரணங்களைத் தரமுடியவில்லையென்றாலும், அதிகமான பேர்கள் பேசுகின்றனர் என்பதை மட்டும் அவர்கள் காரணமாக்கிக் காட்டுகிறார்கள். ஆங்கிலத்தைப் போல பயனுள்ள மொழியல்ல, பண்பட்ட மொழியல்ல, இலக்கியவளமோ இலக்கண ஒழுங்கோ உடைய மொழியல்ல, விஞ்ஞான தொழில் நுட்பங்களைத் தெரிந்துள்ள மொழியுமல்ல; இருந்தாலும் "இந்தியாவில் அதிகமானவர்களால் பேசப்படுகிற மொழி; எனவே இந்தி மொழி அரசாங்க மொழியாக வேண்டும்" என்று சொல்கின்றார்கள்.

இந்தி ஆதரவாளர்கள் கணக்குப்படி, இந்தியாவில் 100-க்கு 42 பேர்கள் இந்தி தெரிந்தவர்களாம்! 1951-ல் எடுக்கப்பட்ட மக்கள் தொகைக் கணக்குப்படி, இந்தியாவின் மக்கள் தொகை மொத்தம் 35 கோடி 69 இலட்சம். இதில் 14 கோடி 99 இலட்சம் மக்களுக்கு, அதாவது 100-க்கு 42 பேர்களுக்கு இந்தி தெரியுமென இந்திப் பிரியர்கள் கூறுகிறார்கள்.

கெர் தலைமையில் அமைக்கப்பட்ட அரசாங்க மொழிக்குழுவினர் தந்துள்ள அறிக்கையில் கூட, இந்த "100-க்கு 42" புள்ளிவிவரம் தரப்பட்டுள்ளது!

1951-ல் இந்தி தெரிந்தவர்கள் தொகை 14 கோடி 99 இலட்சம் பேர்கள் என்கிறார்கள்! ஆனால் ஆண்டுக்கொரு தடவை வெளியிடப்படும் சில புள்ளிவிவரக் குறிப்பு நூல்களில் (Year Book) இந்தி தெரிந்தவர்கள் தொகை 9 கோடிதான் என்று போடப்பட்டிருக்கின்றது.

ஏன் இந்த வேறுபாடுகள்? இந்தி தெரிந்தவர்கள் உண்மையில் எத்தனை பேர்? 14 கோடி 99 இலட்சம் என்று சொல்வது சரியா? அல்லது 9 கோடி என்று சொல்வது சரியா?

இத்தகையக் கேள்விகளைக் கேட்டுக்கொண்டு, மக்கள் தொகைக் கணக்கு (சென்சஸ்) அறிக்கைகளைப்புரட்டினால் சில உண்மைகள் தெரிய வருகின்றன.

மொத்த மக்கள் தொகையில் 14 கோடி 99 இலட்சம் பேர்கள் என்று அவர்கள் சொல்கிற கணக்கில், இந்தி தெரிந்தவர்களும் இருக்கிறார்கள்! இந்தி தெரிந்தவர்களும் இருக்கிறார்கள் என்றால், அவர்களுடன் இன்னும் சிலரும் சேர்க்கப்பட்டால்தான் இந்தக் கணக்கு வரும்!

இந்தி, உருது, இந்துஸ்தானி, பஞ்சாபி ஆகிய நான்கு மொழி பேசுபவர்கள் தொகையையும் சேர்த்தால்தான் இவர்கள் போடுகிற 14 கோடி 99 இலட்சம் (100க்கு 42 கணக்கு) வருகிறது.

இந்தி பேசபவர்களின் எண்ணிக்கைத் தனியாக இல்லாத காரணத்தால் இந்தி, உருது, இந்துஸ்தானி, பஞ்சாபி, ஆகிய நான்கு மொழிக் கணக்குகளை ஒன்றாக அரசாங்கக் கணக்குத் தருகிறது!

இந்தி, உருது, இந்துஸ்தானி, பஞ்சாபி ஆகிய நான்கு மொழிகளும் ஒன்றுதானா என்றால் இல்லை. ஒன்றுக்கொன்று சிலவகைகளில் தொடர்பு உண்டென்றாலும், வரலாற்றாலும், சொற்களாலும், இலக்கணத்தாலும், எழுத்தாலும், அவை வெவ்வேறு மொழிகளே! அந்த நான்கு மொழிகளையும் ஒன்றாகக் கருதுவது சரியென்றால், அதைவிட நல்ல காரணங்களைக் காட்டி தமிழ் மலையாளம் கன்னடம் தெலுங்கு ஆகிய நான்கு மொழிகளையும் ஒன்றாக்கிவிடலாம். இந்திக்கும் உருதுக்கும் இருக்கும் தொடர்பைவிட அதிகமான தொடர்பும் ஒற்றுமையும், தமிழுக்கும் மலையாளத்துக்கும் இருக்கின்றன, இந்திக்கும் பஞ்சாபிக்கும் இருக்கும் தொடர்பைவிட அதிகமான தொடர்பு கன்னடத்துக்கும் தெலுங்குக்கும் இருக்கின்றது!

இந்தி, உருது, இந்துஸ்தானி, பஞ்சாபி ஆகிய நான்கு மொழிகளையும் ஒன்றாகக்கூட்டி இந்திய அரசாங்கத்தினர் கணக்குக் காட்டி விட்டார்களே தவிர, இவ்வாறு ஒன்றாக வைத்து எண்ணும்படி அந்த மொழிக்காரர்கள் என்றைக்கும் ஒருப்பட மாட்டார்கள்!

உருதுவுக்கும் இந்திக்கும் பலமான வேறுபாடு—வேற்றுமை இருக்கிறது! உருது என்பது, வட இந்தியாவுக்குள் படையெடுத்து வந்த மகமதியப் படைவீரர்கள் வழங்கிய மொழியாகும். அவர்கள் கஜனி மகமது காலத்திலிருந்து இந்தியாவிற்குள் பரவத் தொடங்கி, பின் ஆளும் பரம்பரையினராக மாறினர். அவர்கள் பேசிய அரபி, பாரசிகச் சொற்கள் கலந்து உருது மொழி வளர்ந்தது. அரபி மொழியில் "உருது" என்றால் "துருப்பு, படை, பாடி வீடு" என்று பொருள்படும். படையிலிருந்தவர்கள் பேசியபடியால் இது உருது எனப்பட்டது. இது அரபி, பாரசிகச் சொற்கள் மிகுந்து, அரபிய எழுத்துக்களும், இலக்கணமும் உடையதாக இருந்தது.

இந்திமொழி 19ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஒரு சிலர் கூடி உண்டாக்கிக்கொண்ட ஒருசெயற்கைமொழி! வடநாட்டில் அப்பொழுது ஆளும் பரம்பரையுடன்இருந்தவர்கள் முஸ்லீம்கள். அவர்களுடையஆதிக்கத்தைமட்டந்தட்ட நினைத்த வெள்ளைக்காரர்கள், முஸ்லீம்களுக்கு எதிராக இந்துக்களைக் கிளப்பிவிட முயன்றார்கள்! அப்பொழுது வட இந்தியா முழுமையும், இந்துக்கள்-முஸ்லீம்கள் என்ற பாகுபாடின்றி, உருதுமொழியைப் பேசிவந்தனர். முஸ்லீம்களிடமிருந்து இந்துக்களைப் பிரிக்க நினைத்த ஆங்கிலேயர்கள், "உருது முஸ்லீம்களின் மொழியென்றும் இந்துக்களுக்குத் தனிமொழி வேண்டுமென்றும்" சொன்னார்கள். வெள்ளையரின் சார்பாக கில்கிரிஸ்ட் என்ற அதிகாரி, இந்துக்களுக்காகப் புதுமொழி உண்டாக்கும் முயற்சியில் ஈடுபட்டார். அவருடைய ஆதரவில், லல்லுபாய், சடல்மிஸ்ரா, என்ற இரு சமஸ்கிருத பண்டிதர்கள் புதுமொழியை உண்டாக்கத் தலைப்பட்டார்கள். அவர்கள் என்ன செய்தார்களென்றால் வழக்கத்திலிருந்த உருதுமொழியை முன்வைத்துக்கொண்டு அதிலிருந்த அரபி, பாரசிகச் சொற்களை விலக்கிவிட்டு அவைகளுக்குப் பதிலாக வழக்கிழந்து இருந்த சமஸ்கிருத சொற்களைத் தேடிப் பிடித்துப் போட்டார்கள். மொழியின் வரிவடிவம்—அதாவது எழுதப்படும் எழுத்துக்கள் உருது மொழியில் இருந்ததை மாற்றி, சமஸ்கிருத மொழியின் தேவநாகரி வரிவடிவத்தை கொண்டு வந்தார்கள்! இப்படியாக ஒரு புதுமொழி—ஒரு செயற்கைமொழி உண்டாக்கப்பட்டு, அது தான் இன்று இந்தி எனக் குறிப்பிடப் படுகிறது. இந்திமொழி உண்டாகி 160 ஆண்டுகளுக்கு மேல் கிடையாது.

இந்திமொழி இந்துக்களின் மொழி எனவும் உருதுமொழி முகமதியர்கள் மொழி எனவும் உண்டானபிறகு, இந்தி-உருது சண்டை, இந்து—முஸ்லீம் சண்டையாக மாறியது! அந்தச் சண்டை வரவர வளர்ந்து, வகுப்புக் கலவரங்களும் இரத்தக் களறிகளும் ஏற்பட்டு, கடைசியாக இந்தியா—பாகிஸ்தான் எனப் பிரிகிற அளவு சென்றது! இந்திக்கும் உருதுவுக்கும் எந்த அளவு ஒற்றுமையென்றால், கத்தியெடுத்து ஒருவரையொருவர்

(11-ம் பக்கம் பார்க்க)

மேலான பார்வைக்கு

அனந்தன்

அரசியலை விட்டுத் துறவறம் பூண்டிருக்கும் ஜெயப்பிரகாசானந்த சாமிகளின் மேலான பார்வைக்குக் கடம்பத்தூர் கம்பளியானந்த சாமிகள் எழுதிக் கோண்டது.

கடைசியாக அரசியலை விட்டுத் துறவறம் பூண்டு வந்து விட்டதாக நமது பிரதமசீடன் பத்திரிக்கைப் படித்துச் சொல்ல, நாம் கேட்டு மிகவும் மகிழ்ச்சியடைந்தோம். எனது கடம்பத்தூர் மடத்துச் சார்பாகவும் (அதிலிருக்கும் ஒரு தாழ்வாரம் நீங்கலாக, அது இடிந்து கிடக்கிறபடியால்), எனது சீடகோடிகள் சார்பாகவும் (அவர்களில் இரண்டாவது முக்கிய சீடனாகஇருந்த முருகானந்தன் நீங்கலாக, ஏனென்றால் அவன் ஒரு பெண்ணை இம்சித்ததாக போலிசு அவன்மீது வழக்குப் போட்டிருக்கிறார்கள். ஒரு பெண்ணை அவள் விருப்பத்துக்கு மாறாகப் பலவந்தப்படுத்துவது துறவறத்துக்கு நல்லதல்ல.) நமது சார்பாகவும் (என்னைப்பற்றி முன்பெல்லாம் ஏதாவது புகார்கள் வந்திருந்தாலும், இப்பொழுதெல்லாம் எதுவும் வராது), மற்றும் பரத கண்டத்தில் பல்வேறுகோலங்களில் காட்சியளிக்கும் துறவிகளின் சார்பாகவும், துறவு பூண்டு வந்திருக்கும் தங்களை வரவேற்கிறோம்.

இதற்கு முன் பலதடவைகள் துறவறம்கொள்ளப்போவதாக நீங்கள் சொல்லியிருந்தீர்கள்! இப்பொழுது துறவு கொண்டு விட்டதாகச் செய்தி வந்த பொழுதுகூட, இதற்குமுன் துறவு கொள்ளவில்லையா என்று சில பக்தர்கள் கேட்டார்கள். இவ்வாறு "துறவு கொள்ளப் போகிறேன்!" "துறவு கொள்ளப் போகிறேன்!" என்று சொல்லியதிலும் ஒரு லாபம் இருந்திருக்கிறது.

இந்தச் சமயத்தில் நமது சீடர்களில் ஒருவனான பிரமானந்தன் கதை ஞாபகத்துக்கு வருகிறது. இல்லறத்திலிருந்த பொழுது, பிரமானந்தனின் பெயர் ஏகாம்பரம். அவனுக்கு மயில் வாகனம் என்று ஒரு மைத்துனன் இருந்தான். மயில்வாகனத்துக்கு குடும்பத் தொல்லை அதிகம். ஒருநாள் காலை ஏகாம்பரத்திடம் வந்தான். "இதோபார்! ஏகாம்பரம்! என்னால் குடும்பப்பாரம் தாங்கமுடியாது! சந்நியாசம் வாங்கிக் கொள்ளப் போகிறேன்!" என்றான். ஏகாம்பரம் கேட்டுக் கொண்டான். ஒரு வாரங்கழித்து மயில்வாகனம் வந்தான். "முடிவு செய்து விட்டேன். சந்நியாசம் ஆக வேண்டியதுதான். இதை யாரும் தடுக்கமுடியாது!"

அதற்கப்புறம் பத்து நாள் கழித்து "ஏகாம்பரம்! சந்நியாசம் வாங்குவதற்கு எல்லா ஏற்பாடுகளையும் செய்துவிட்டேன்! ஊருக்குக் கடிதம் போட்டுவிட்டேன், அடுத்த மாதம் முதல்தேதி மாமனாரை வரவழைத்து அவரிடம் கணக்கு வழக்குகளை ஒப்புவித்துவிட்டு, சந்நியாசம் வாங்க வேண்டியதுதான்." என்று மயில்வாகனம் சொன்னான்.

மறு மாதம் முதல் வாரத்தில் மயில்வாகனம் மீண்டும் வந்தான். "இந்த மாதம் காவி வாங்குவதற்கு நல்ல மாதமில்லையாம். அடுத்த மாதத்தில் நல்ல நாள் ஒன்று வருவதாக ஜோஸ்யர் சொன்னார்! காவி வாங்கிவிடுவேன்! எங்கேயாவது ஒரு மடத்தில் சேர்ந்து இந்த குடும்பம், வீடுவாசல் புதிதாக வாங்கியிருக்கிறேனே ஒருபெரிய தோட்டம் – நாற்பது தென்னைமரம், பத்து மாமரம், நல்ல தோட்டம். விலை குறைவாக இருந்ததேயென்று வாங்கிப் போட்டேன். இன்னும் இரண்டு வருசத்தில் நல்ல பலன் தரும். அந்தத் தோட்டத்தைக்கூட மறந்து நான் சந்நியாசியாகி விடப் போகிறேன. நான் இல்லாத சமயத்தில், நீதான் இந்தத் தோட்டத்தையும் மற்ற கணக்கு வழக்குகளையும் பார்த்துக்கொள்ள வேண்டும். நமக்கு வரவேண்டிய கடன் பாக்கியே..."

மயில்வாகனம்முடிக்கவில்லை, ஏகாம்பரம் இடைமறித்து "இந்தா! மயில்வாகனம்! நீயும் ஆறுமாதமா சந்யாசியாகப் போகிறேன், சந்யாசியாகப் போகிறேன் என்று சொல்லிக் கொண்டே இருக்கிறாய்! உன் தொல்லை என்னால் தாங்கமுடியவில்லை! இதோ, பார்! இன்றைக்கே இப்பொழுதே நான் சந்யாசியாகப் போகிறேன்!" என்று துண்டை உதறித் தோளில் போட்டு, வெளியே வந்துவிட்டான். அப்பொழுது நல்ல வசதியுடன் நமது மடம் இருந்ததால், அவனை நமது மடத்தில் நாம் சேர்த்துக் கொண்டோம்.

மயில்வாகனம் அடிக்கடிச் சொல்லி வந்ததால்தானே; ஏகாம்பரம் போன்றவர்கள் துறவறத்துக்கு வரமுடிந்தது. அதைப்போல நீங்கள் அடிக்கடிச் சொல்லியதைப் பார்த்து உங்கள் கட்சியிலிருந்து பலர் துறவறம் பூண்டுவிட்டதாக அறிகிறேன். நமது கடம்பத்தூர் மடத்தில் கூட இரண்டு பேர்கள் அரசியலிலிருந்து துறவுபூண்டு வந்திருக்கிறார்கள். கடைசியாக நீங்களும் துறவு பூண்டது குறித்து மிகவும் மகிழ்ச்சி! எல்லாம் முருகப் பெருமான் கருணை! கல்யாணமாகாமலிருந்த முருகப் பெருமானைப்பற்றிச் சொல்கிறேன். ஒரு பெண்டாட்டியை வைத்துச் சமாளிக்கிற இல்லறமே இவ்வளவு பயமாயிருக்கிறது. இரண்டு பெண்டாட்டிகளை வைத்திருக்கிற இல்லறம் அப்பாடா! நினைக்கவே, பயங்கரமாயிருக்கிறது, வள்ளி, தெய்வயானையைச் சந்திக்கிறதுக்கு என்றால் தனிமையாக இருந்த முருகப் பெருமானைத்தான் நாம் வழிபடுகிறோம். அந்தக் கல்யாணமாகாதிருந்த முருகன் கருணையால்தான் நம்மில் பலர் துறவிகளாகிறது.

கடைசியாக, இந்தக் கடிதத்தை எழுதச் சொன்னதன் அவசியத்தையே நாம் மறந்து வேறு இலௌகிக விஷயங்களைப் பேசுகிறோம். உங்களிடம் ஒரு அருமையான யோசனையைச் சொல்லத்தான் இந்தக் கடிதத்தைஆரம்பித்தோம். இப்பொழுது நீங்கள் ஒரு அரசியல் கட்சியிலிருந்து துறவு கொண்டு வந்து விட்டீர்கள்! உங்களைப் போலவே அரசியலிலிருந்து துறவுபூண்டு பலர் வந்திருக்கிறார்கள். வெவ்வேறு காரணங்களுக்காக வந்திருந்த போதிலும், அரசியல் துறவிகள் பலர் இருக்கிறார்கள்! ஒவ்வொரு தேர்தல் முடிவிலும், மந்திரி சபைகள் அமைக்கப் படும்பொழுதும், மேலும் பலர் அரசியலை விட்டுவரத் தயாராக இருப்பார்கள்! நமது எண்ணமென்னவென்றால், இவ்வளவு அரசியல் அனுபவங்களும் வீணாகப் போகக்கூடாது என்பதுதான். ஆகையால் நாமெல்லாம் ஒன்றுகூடி, அகில இந்திய துறவிகள் அரசியல் கட்சி ஒன்றை ஆரம்பிக்கலாம். இந்தப் பெயரே இருக்கவேண்டுமென்பதில்லை. "சந்நியாசிகள் சமதர்மக் கட்சி" "பாரத் வருஷ பைராகிக் கட்சி" இப்படி ஏதாவது ஒரு பெயரைக் கொடுத்து விடலாம்! இப்படித் துறவிகள் பார்த்து ஒரு கட்சியை ஆரம்பித்தால், மடாதிபதிகள் தம்பிரான்கள் நமக்கு ஆதரவாக வருவார்கள்!

துறவிகள் அரசியலில் ஈடுபட்டு, இலங்கை, பர்மா போன்ற இடங்களில் பலமான அரசியல் கட்சிகளுடன் இருப்பதாகத் தெரிகிறது. சந்நியாசிகள் அதிகமாக இருக்கிற இந்தப் புண்ணிய பூமியில் மட்டும் அப்படி ஒரு துறவிகள் அரசியல் கட்சி இல்லாதிருப்பது பெரிய குறையேயாகும்.

கடம்பத்தூரில் இருக்கிற கம்பளிச்சாமி இப்படி எழுதுகிறதே என்று நீங்கள் வருத்தப் படக்கூடாது, இப்படி ஒரு அரசியல் கட்சியை வைத்து நடப்பதில் பல சங்கடங்கள் இருக்கும். துறவிகள் அரசியல் கட்சி என்றதும், உண்மையான துறவிகள்—கட்சி, கொள்கை, நேர்மை, நியாயம் இவைகள் எவற்றிலும் பற்று அற்ற துறவிகள் பலர் அந்தக் கட்சியில் சேர்ந்துவிடுவார்கள். இருந்தாலும் இவர்களை வரவேற்று, நமது கட்சியை ஆரம்பித்தால், சுலபத்தில் பலம் பொருந்திய கட்சியாகிவிடலாம்! அப்புறம் பிடிக்கவில்லையென்றால், இந்த துறவிகள் கட்சியையும் "துறந்து" விட்டு, நீங்கள் வெளியேறிவிடலாம்! நாங்கள் அதைத் தொடர்ந்து "பற்றற்ற" நிலையில் நடத்திக் கொள்கிறோம்!

நீங்கள் அரசியலில் மிக நேர்மையாக இருந்து வெளியேறியவர்! இருந்தாலும், நீங்கள் வந்தால் நன்றாக இருக்குமேயென்ற ஆசையில் இந்தச் சாமி இப்படி எழுதுகிறது. சாமியார் என்றால்கூட இது மாதிரி சிறு ஆசைகள் வருகின்றன! நீங்கள் வரவில்லை யென்றால்கூட, இந்த அரசியல் துறவிகள் கட்சியை—பாருங்கள் தடுமாறுகிறது, துறவிகள் அரசியல் கட்சியை ஆரம்பிப்பதாக இருக்கிறோம்!

சாமியப்பன் துணை! சந்நியாசிக் கோலத்திலிருக்கும் முருகப் பெருமான் துணை!

கடம்பத்தூர் மடத்து கம்பளியானந்த சாமிகள் அனுக்கிரகிக்க, அவரது பிரதம சீடன் காவியானந்த சாமிகள் எழுதியது.

சிவமயம்

காவியானந்தர்.

மன்றம் வார இதழின் சந்தா விபரம்

உள்நாடு (இலங்கையும் சேர்த்து)

இரண்டாண்டு	...	ரூ. 15·00
ஓராண்டு	...	ரூ. 8·00
ஆறுமாதம்	...	ரூ. 4·00
தனி இதழ்	...	16 காசு

இலங்கை சந்தாதாரர்களுக்கு வி. பி. பியில் தனிச் செலவு 75 காசு.

வெளிநாடு (மலேயா-பர்மா)

இரண்டாண்டு	...	ரூ. 18·75
ஓராண்டு	...	ரூ. 10·00

(ஓராண்டிற்கு குறைந்த சந்தா இல்லை)

தனி இதழ்	...	20 காசு

றுகதை

அவன் யார்?

(நெல்லை அருணன்)

அவன் யாரென்ற கேள்வி எல்லோராலும் கேட்கப்பட்டது. அவனவ்வளவு புதிரான மனிதனே புதிதான மனிதனே அல்ல! எல்லோரிடையேயும் பழகினன், எல்லா நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டிருந்தான், எங்கணும் உலவித்திரிந்தான். ஆயினும் அவன் யாரென்று எவரும் அறியமுடியாமலிருந்ததென்ருல், அவன் மறைந்து உலவவில்லை, திடீரென்று தோன்றிமறையுந் தன்மை பெற்றிருக்கவில்லை, வாகன வசதிகள்கூட ஏற்படுத்திக் கொள்வது கிடையாது! பெரும் பணம்படைத்தவனுகத் தானிருந்தான். ஆனல் கருமித்தனம் படைத்திருக்கவில்லை! நிறையச் செலவு செய்வான். என்ருலும் ஏமாறமாட்டான்! எங்கும் செல்லுவான் எதற்கும் அஞ்சமாட்டான். எது எப்போது தேவையோ அவ்வபோது பயன் படுத்திக் கொள்வான். பண வசதி, உடல் வலிவு, யார்க்கும் நல்லவனுயிருத்தல் இவை அவன் யாரென்ற கேள்வியையே பிறருக்கு ஏற்படுத்தாமல் இருந்தது. அவன் யாரென்ற சந்தேகம் வெளியிலிருப்பவர்களுக்கு மட்டுமல்ல அவன் வீட்டிலுள்ளவர்களுக்கே ஏற்படுவதுண்டு. வீட்டிலே அழகான ஒரு இளம்பெண். அவளைக் கல்லூரிப் படிப்புக்கு அனுப்பி வைத்திருந்தான். மற்றுமொரு பெண்ணிருந்தாள் அவள் அவனது மனைவியென்றுதான் எல்லோரும் கருதியிருந்தனர். இளம் பெண் அவனுடைய மகளாக இருக்கவேண்டும். இதுதான் எல்லோருடைய முடிந்தமுடிவு. என்ருலும் இத்தனை வளமும் வசதியும் பெற்றிருந்த அவன் ஏனிப்படி ஊர்ப்புறத்திலே வாழவேண்டும்? என்கின்ற சந்தேகம்தான் எவருக்கும் வரக்கூடும். ஏனென்ருல் நபருக்கு ஒன்று வகைக்கு ஒரு விதம் கார் வாங்கி வைத்துக் கொள்ளத் தக்க வசதி. அனுபவிக்கத் தெரியாத அளவு மந்தமதி படைத்தவனுமல்ல! அன்ருட நாகரீகத்தில் சிறிதளவும் குறைவின்றித் திகழும் தன்மை படைத்திருந்தான். எனினும், எதுவும் நிரந்தரமாக்கிக் கொள்வதில்லை! ஏதேனும் மனக்கவலையோ அல்லது வெறுப்போ என்ருல் அதுவும் தென்படவில்லை. எப்போதும் மலர்ச்சி எந்த நிலையையும் விரும்பிஏற்றல் கலை அவனது இயற்கைப் பண்பாக அமைந்திருந்தது. ஆகவேதான் இத்தகைய புதுவித மனிதன் யாரென்ற கேள்வியும், இது போன்ற வளமும் வாய்ப்பும் பெற்றிருக்கும் இவன் யாரென்றகேள்வியும் எழுந்தது. இது வெளியாருக்கு; வீட்டினுள்ளிருந்தவர்க்கோ:

தங்களுக்கு எந்தவிதக் குறையுமின்றி வாழ வைத்திருக்கும் அவர் எவ்வளவோ குறையுடையவராய் (நடைமுறையிலே அல்ல-வாழ்க்கையில்) வதைபட்டு வாழ்வதைக் கண்டு பொறுத்திருக்க முடியவில்லை அவர்களால். எனவே அடிக்கடி அவரிடம் அவரது வாழ்க்கை நுணுக்கங்களைக் கேட்டறிய முயற்சித்தனர். அவரோ எந்தவித மாற்றமுமின்றி அவர்களுக்குச் சமாதானம் கூறுவாரேயல்லாமல் அவர்களுக்கு அது உண்மையென்று தோன்றியதில்லை. உண்மையில் அவள் அவனது மகளாகவும்-மற்றவள் மனைவியாகவு மிருந்தால் தாயன்பு அவளிடமிருக்கிறது. தந்தையன்பை அவர் காட்டிய போதிலும் இருவரும் கணவன் மனைவியன்புடன் நடந்து கொள்வதைக் கண்டதில்லை. இதன் உண்மையை எவரும் கண்டதில்லை. உண்மை என்னவெனில் அவர்கள் இருவரிடையேயுமே ஒரு வரலாறு அடங்கியிருந்தது. அவரும் அப்படித்தான். மூன்று வெவ்வேறு சரித்திரத் தலைமை பூண்டவர்களாக அவர்கள் இருந்தார்கள்.

இளம் பெண்; பெயர் கல்யாணி: கல்யாணத் தோற்றமாகவேதான் காட்சியளிப்பாள். அத்தகைய அழகமைப்பு, ஆடையணிகலன்கள், நறுமண நிறைவு, எல்லாம் சேர்ந்து நித்திய கல்யாணியாகவே திகழ்ந்து வந்தாள் அவள். அறிவறிந்த நாளிலிருந்து அவளுக்குப் போதிக்கப் பட்டுவந்ததெல்லாம் 'ஏழைமையின் தோழமை-இரக்க மனப்பான்மை அஞ்சாத உளப்பாங்கு, ஆகிய இவைகள்தான். அவளுக்கே வியப்பாகத்தான் இருந்தது. இவ்வளவு பெரிய செல்வச் சீமானுக இருக்கும் தந்தை, பணம் படைத்தோரின் நினைவுக்கே வந்தறியாதவைகளை-மறந்தறியாதவரா யிருக்கிருரே என்று ஆச்சரிய மடைந்தாள், ஆனலும் அவர் போக்கிலே எந்தவித மறுப்பும் ஏற்படத் தேவையில்லாததால் அவளுக்கும் சம்மதமாகவே இருந்து வந்தது. அவர் அடிக்கடி கூறுவதுண்டு "மகளே! நீ என்னிடம் எதையும் மறைக்கத் தேவையில்லை. இதை எதற்காக நான் அடிக்கடி கூறி வருகிறேனென்ருல், பெண்கள் எல்லாவகையிலும் திறந்த உள்ளம் படைத்தவர்களாக இருப்பார்கள். ஆனல் உள்ளத்தில் ஒருவனுக்கு இடங் கொடுக்கின்ற செய்தியை மட்டும் தனக்கு உரிமையாளரிடங் கூடச் சொல்லமாட்டார்கள். எப்படியும் கடைசியில் சொல்லித்தானே ஆகவேண்டும் என்கின்ற சிறுஉண்மைகூட அவர்களுக்குப் புலப்படுவதில்லை! எனவே தனிமையில் எண்ணி மகிழ்ந்தும், சில வேலைகளில் ஏமாற்ற மேற்பட்டுத் துன்பம் நேரிட்டால்கூட சொல்லவகையற்றவர்களாய் வாளா இருப்போர் பலர்-வாழ்வையே முடித்துக் கொள்வோர்பலர். இது போன்ற நிலை உனக்கு வேண்டாம். செயலின் தொடக்கத்திலேயே மறைத்துப் பழகாதே! வெளிப்படையாகக் கூறு. வெறுப்படைய மாட்டேன். உன் விருப்பம் சரியானதாக இருந்தால்மகிழ்வோடுஏற்பேன் தவருன நம்பிக்கை கொண்டிருப்பதானல் எடுத்துக் கூறித் தடுப்பேன். யாரை வேண்டுமானுலும் விரும்பு. பணம் படைத்தோரை நாடாதே! அவர்கள் பகட்டும், மினுக்கும், பகல்வேஷக் காட்சிகளும் உன் பார்வையைப் பக்குவமாக இழுக்கலாம். அதில் மனதைப் பறிகொடுக்காதே! வாழ்வைப் பலி கொடுக்காதே! பணக்காரர்கள் நல்ல இதயம் படைத்தவர்களாக எப்போது மிருந்ததில்லை. சிலர் வேண்டுமானல் விதிவிலக்காக இருக்கலாம். அவர்களைக் கொண்டு மற்றவர்களைக் கணக்கிடக் கூடாது. எனவே ஆசை ஏற்படலாம்; அறிவை இழந்துவிடாதே! காதலுக்கு மனதில் இடங் கொடு; வாழ்வைப் பலி கொடுக்காதே-வார்த்தைகளைக் கேள் நம்புவதற்குமுன் சிந்தித்துப் பார்—செயலாற்று; அதனல் செயலற்ற நிலையை அடையாதே! இவைகள்தான் நான் உனக்குத் தரும் பாடம்" என்று விடாது கூறிவந்தார்.

அதேபோல் ஒரு இளைஞனுக்குத் தன்னைப் பலி கொடுக்கும் நிலை வந்தது. காதலெண்ணம் கருத்தை மறைத்தது. காதலன் வாய்மொழி சிந்தையில் உறைந்தது. வெளியே சென்று வீடு திரும்பிய அவள்; அவளை எப்போதும்போல் எதிர்பார்த்திருக்கும் தந்தையிடம் என்றும் எதிர்பார்த்திராத கேள்வியைக் கேட்டாள்.

"தாங்கள் என் அப்பா இல்லையாமே" என்று வந்ததும் வராததுமாகக் கேட்டு, வீட்டினுள்ளேகூடச் செல்லாமல் நின்று கொண்டிருந்தாள். இந்த நிலை ஏற்படுமென்று கருதியிராத அவருக்கு இந்தக் கேள்வி கல் கொண்டு தாக்குவதுபோலிருந்தது. ஒரு நிமிடம் தலை சுழன்றது வேகமாக எழுந்து "கல்யாணி" என்ற அதட்டுக் குரலுடன் கன்னத்தில் பளாரென்று அறைந்துவிட்டார். கன்னமும் கண்களும் சிவந்தது. அவரது கண்களில் கண்ணீர் வழிந்தது. விளையாட்டாகவும் செல்லமாகவும்கூட கன்னத்தில் தட்டியறியாத அவர், அன்று ஓங்கி அறைகிற அளவுக்கு ஆத்திரம் அதிகரித்துவிட்டது. எதையும் முன்கூட்டியே சிந்திப்பதும் அதற்குத் தகுந்த முறையில் செயலாற்றுவதற்காகச் சிந்தனையைச் செலவிடுவதும் அவர் வழக்கம். ஆனல் அவருடைய செயல்களுக்கும் திறமைக்கும் ஒப்பிட்டுப் பார்த்தால் கல்யாணியை அறைந்ததற்குரிய காரணம் மிகமிகச் சர்வ சாதாரணம். அவரதை மறந்துவிட்டதற்குக் காரணமுங் கூட, அந்த நிலை ஏற்படுவதற்குற்ற சூழல்கள் நேர்ந்துவிடுமென ஒரு சிறிதும் கருதியிராதது தான். எனவே பொன்னும் பூவும் நிறையாக வைத்து வளர்த்த பெண்ணை, அவள் இதயமும் கன்னமும் புண்ணுகும்படி நடந்து அடித்துவிட்டோமேஎன்று ஒருபுறம் நின்று ஆற்ருெணுத்துயரால் கண்ணிருகுத்தவண்ணமிருந்தார்.

கல்யாணி அடிபட்ட வேதனையுடன் உள்ளே சென்று தன் மேஜையில் தலையைக்கவிழ்த்த வண்ணம் தேம்பித் தேம்பி அழுதுகொண்டிருந்தாள். அவள் தேம்பலுக்கிடையே அம்மா! அம்மா...என்கின்ற குரல் மெல்ல ஒலித்துக்கொண்டிருந்தது. அதைக் கேட்டதும் அவரது நிலை நெருப்பில் விழுந்த புழுப்போலிருந்தது." அய்யோ! பேதையே உன் அறியாத்தனம் என்றெண்ணி உன் முட்டாள்தனத்தை உணராமல் உன்னை அடித்துவிட்டேனே" என்று எண்ணியவராய், மேலும் அவள் வருத்தத்தை அதிகரிக்கவிடாமல்-கல்யாணி! அருமை மகளே! என்று கூப்பிட்டுக்கொண்டே ஓடினர். அங்கே கல்யாணி கவிழ்ந்த தலையுடன் கண்ணீர் தரையிலே தேங்குமளவுக்கு அழுதுகொண்டிருந்தாள்.

"கல்யாணி! உன்னிடம் யாரம்மா சொல்லியது நான் உன் தந்தையல்ல என்று? உன்னிடம் சொன்னவன் ஏன் அவ்விதம் சொன்னன் என்பது உனக்குத் தெரியுமா?"

என்று கேட்டவுடன், தான் செய்தது தவறு என்பதை எண்ணி வருந்திக்கொண்டி

ருந்த காரணத்தால் அவரவ்விதம்கேட்கவும் மேலும் தேம்பியழ ஆரம்பித்தாள். விம்மிக்கொண்டே "அப்பா...நா...ன் கேட்டது தப்பு......இனிமே கேட்கமாட்டேம்ப்பா"

"செல்வமே! நீ கண்ணீர் சிந்தக்கூடாது என்பதற்காக எவ்வளவு பாடுபட்டு உன்னைப் பாதுகாத்துவந்தேனே, அவற்றுக்கெல்லாம் மீறி நீ என் முன்னேயே தேம்பியழுவதற்கு உன்னை ஆளாக்கிவிட்டேனேயம்மா! கல்யாணி-காலங் கடந்தாலும், உன்நிலையில் என் வரலாற்றையறியக்கூடாது என்றெண்ணிக் காத்துவந்தேன்! எவனோ உன்னிடம் தன் சூட்சிவலையை விரித்து உன் சலனமற்ற சிந்தையிலே சந்தேகத்தை ஏற்படுத்திவிட்டானே! கல்யாணி யாவும் விவரமாகவே சொல்லுகிறேன் கேள்!"

"வேண்டாமப்பா வேண்டாம்! உங்களுக்கு வேதனை தரும் அந்தச் செய்தியை என் பொருட்டு வாதனையைத் தாங்கிக்கொண்டு சொல்லவேண்டாமப்பா! நானதை அறியவேண்டாம்."

"இல்லை மகளே! சந்தேகம் ஒரு மறைமுக நோய். அது பரவும்விதம் தெரிந்துகொள்ள முடியாது. இதுவரை அதைப் பற்றிய எண்ணமே ஏற்படாமலிருந்தது. ஆனால் இப்போதோ, அந்தஎண்ணம் ஏற்பட்டுவிட்டது. அதுபற்றிய ஒவ்வொரு நிகழ்ச்சியும் உன்னுள் ஒவ்வொரு புதுஉருவாக உதித்தெழும். எல்லாம் சேர்ந்து உன்னை-உன் அறிவை அலைக்கழிக்கும். இதில் நீ அறியக்கூடாதது எதுவுமில்லை! அறியவேண்டா மென்பதற்காகவும்-காரணம், அதையறிந்துகொண்டபின் ஏற்றுச் செயலாற்றும் துணிவு உனக்கு இல்லையென்பதால். இனி நான் மறைப்பதில் பயனில்லையல்லவா வா என்னுடன்"

என்று அழைத்துக்கொண்டு சென்று ஒரு அறையில் உட்கார வைத்துக்கொண்டு மேடைப் பேச்சுப் பேசுபவரைப் போல நிறுத்தாமல் தொடர்ந்து கூறிக்கொண்டே வந்தார்:

"அருமைக் கண்மணி! நான் உன்னிடம் கூறுகின்ற செய்தியைக் கேட்ட பின்னர்-அந்தச் செய்தி யுள்ளடங்கிய நிகழ்ச்சிகளுக்கு நீ காரணம் என்ன என்று என்னைக் கேட்பதோ ஏன் அவ்விதம் என்றுஎண்ணித் திகிலடைவதோ கூடாது. 'உன் தந்தை நானல்ல' என்று உன்னிடம் கூறினவன் யாரோ அவன் அந்தச் செய்தியைமட்டும் எப்படியோ அறிந்துகொண்டிருக்கிறானே தவிர, உன் தந்தையாரென்று கூறினானா? அல்லது உன் தந்தை யாரென்றுதான் அவனுக்குத் தெரியுமா? அவைகளை ஏன் அவன் தெரிந்து வைத்திருக்கப் போகிறான். இப்படித்தான் ஒரு சிறுசெய்தியைத் தெரிந்துகொண்டு அதைக்கொண்டே பல மெல்லிய உள்ளங்களை நோகச் செய்வோர் பலருண்டு. அந்தப் பட்டியலில் முதலிடம் வகிப்போர் பலரிலே இவனும் ஒருவன். இவன் ஏன் இவ்விதம் உன்னிடம் பேசியிருக்கிறான் என்பதை நான் உணருகிறேன்.

"என் செல்வமே! உன்னிடம் அடிக்கடி கூறுவேனே 'எதையும் என்னிடம் மறைக்காதே' என்று அடிக்கடி கூறுவேனே கேட்டாயா? எல்லாப் பெண்களையும் போலத்தானே உன் காதலுக்கு நான் சம்மதிக்க மாட்டேனோ என்று கருதிவிட்டாய்! உன் காதலை நான் ஏற்றுக் கொள்கிறேன்-உன் காதலனோடு வாழ உனக்கு அனுமதியளிக்கிறேன்."

"அப்பா!"

"மகளே! இவ்விதம் சம்மதிக்க மாட்டேனென்றுதானே கருதியிருந்தாய். உன் எண்ணம் தவறானது என்பதை இப்போதாகிலும் உணர்ந்துகொள். மற்றுமொன்றையும் உனக்கு உணர்த்துகிறேன். உன் காதலனிடம் போய் உன்னை ஏற்றுக்கொள்ளுமாறு கேள்!"

"நிச்சயம் ஏற்றுக் கொள்ளுவார்!"

"அதுதானில்லை! அவன் நான் உன் தந்தையல்ல என்று கூறியதன் நோக்கமே உன்னை ஏற்றுக்கொள்ள முடியாதென்பதன முதலறிவிப்புதான். இதுமிக கௌரவமான முறையிலே கூறப்பட்டிருக்கிறது. அடுத்து ஆவேசமும் ஆபாசமும் கலந்த சொற்கள்தான் வெளிவரும். உன் தந்தை நானல்ல என்றதே 'தகப்பன் இன்னானென அடியமுடியாத உன்னை என் தந்தையின் பெயர் எட்டுத்திக்கும் எட்ட முட்டி எதிரொலிக்கும் அத்தகையவரின் மகனான நான் மணப்பதா?' என்பதேயாகும். அதை இப்போது நான் சொல்லுவது உனக்கு வியப்பாக இருக்கலாம்! இதே உன் காதலனுக்கு உன்னைக் காதலிக்கும் போது உன் தந்தை நானல்ல என்ற உண்மை தெரியாதா? தெரியும்! ஆனால் உன்னைக் கைவிடுவதற்கு மட்டுமே ஒரு கருவியாக எண்ணிக் கொண்டிருக்கும்போது,உன்னை ஆசைக்குப் பாத்திரமாக்கிக் கொள்ளுமுன் எப்படி அதை வெளியிட மனம் வரும்! நான் சொல்வதை எல்லாம் முழுக்க முழுக்கக் கேட்டுக்கொண்டபின் உன் காதலனிடம் சென்று கேள்! அப்போது அவனிடமிருந்து வரும் பதிலைக்கொண்டு நாட்டு மக்கள் பலரின் மனப்பான்மை எவ்வாறிருக்கிற தென்றும், அவர்கள் எப்போதும் எப்படி நடந்து கொள்ளுகிறார்களென்பதும் உனக்கு நன்குவிளங்கும்! தன்னலங்கொண்டு - தன்வரையில் வாழ எண்ணுவது மட்டு

சேரவாரும்......

திராவிட நாட்டு மக்கள் உளந்தனில்
சீறிக் கிளம்பிய தீ—இன்று
சேரக் கிளம்பியதீ

வேர றுத்து இந்தி வெறியினை
வெட்டி முறித்திடுந்தீ—பகையை
எட்டி மிதித்திடுந்தீ.

வாழ்க தமிழ்மொழி வாழ்க வென
வாழ்த்திடும் பேரொலிகள்—அவர்
ஆர்த்திடும் போரொலிகள்

வீழ்க இந்தி வீழ்க வென்றே
சொல்லிடும் சூளுரைகள்—புகழ்
அள்ளிடும் பேருரைகள்.

இந்தியைக் கொண்டெமை ஆளநினைத்தவர்
அஞ்சி நடுநடுங்க—பகை
துஞ்சி தொடைநடுங்க

செந்தமிழ் தோழர்கள் ஒன்றுதிரண்டனர்
பாட்டு முழக்குகிறார்—உரிமை
வேட்டுக் கிளப்புகிறார்.

செந்தமிழ் காந்திடும் போரணி அதிலே
சேர வருவோரே—பகை
தீர வருவோரே

வந்தனை செய்துமை வாழ்த்தி வணங்கினேன்
வாரும் மென்மேலே—தமிழ்
வாழும் முன்போலே.

—'மான்'

மல்லாமல் பிறர் வாழ்வு சி
வதைக் கண்டு சிந்தை கு
வோர் சீமான்களாய் - பூமா
களாய்-போக போக்யத்
கோமான்களா யிருப்பதை
வாய்!

"நான் உன் தந்தை ய
தான். ஆனாலும் ஒரு தந்
நல்ல செல்வவளம் படை
வன், தான் பெற்ற மகளை
வாறு வளர்ப்பானோ அ
அணுவளவும் குறைவி
உன்னை வளர்த்து வருகிறே
அதை மறுக்க முடியாதே உ
னால்! அதோடுமட்டுமல்ல இ
வரை நீ அம்மா! அம்
என்று அடிக்கொருமு
அழைத்து அன்பைப் ப
கிறாயே அவள் உன் தாயும
இன்னும் ஒரு உண்மையும்
உணரவேண்டும். உன்
என்று அழைக்கின்ற அ
தந்தையென முறையமைத்
கொண்டாயே என்னை
மனைவியுமல்ல"

"அப்பா!"

"வியப்பாக இருக்கிற
இவ்விதம் எந்தவித உ
மில்லாமல் இடைஈடற்ற உ
கொண்டாடிக் கொண்டிருக்
என்னைத்தான் - உன்னி
காதலுறவாட வந்த கனவ
கூறினான் உன் தந்தை
னல்ல என்று, அதை
வந்த நீயும் ஏதோ விரை
கேட்டுவிட்டாய்! அதை
நானும் வேகத்துடன் கே
உன் நிலைமையை அடை
னாக இருந்திருந்தால் என
நடைபெற்றிருக்கும். இவ்வா
உங்களை வைத்து பாதுகா
தால் எனக்கு எந்தவிதபல
ஏற்படுவதில்லை.

எனது வாழ்க்கைக் கா
திலே எனக்கென ஒரு இன்
இருக்கிறதென்பதை நான்
போதோ மறந்து விட்டே
வளமான வாழ்வு வேண்ட
வதைப்படாது இருந்த
போதுமென்றுதான் எண்
னேன். ஒரு சமயம்; பெருவ
வும்-பெயரும் - புகழும் வேண
மென்றுகருதியதுண்டு. அ
சமயத்தில் அது எட்டாத
யாகமட்டுமல்ல-எட்டிப் ப
தாலும் இன்னொருவரால் '
உனக்குரியதல்ல, என்று
டிப் பறிக்கப்பட்டு விடுமெ
நிலையிருந்தது. ஆனால்
போது, இத்தகைய உயர் வ
வும்-நிறை வளமும் வேண்
மென்று உறுதியாகச் சொ
றேன். அது என்னை வ
உறுதியாக அடுக்கிறது.
போதும் உன்னத வா
வந்துவிட்டதென்று உழ
மனதைப் பெற்றுவிடவில்
என் வரலாற்றைக் கேட்ட
உனக்கே வியப்பாக இருக்
அல்லது பொய்யோ பு
துரையோ என்று
எண்ண நேரிடும்! அடிக்க
கேட்டிருக்கிறாயே அந்த அ
யில் என்ன இருக்கிறதெ
வா காட்டுகிறேன்."

என்று கூறி அழைத்
சென்று, ஒரு தனியறை
வைத்துப் பூட்டப்பட்டிரு
ரிக்ஷா வண்டியைக் காட்டி

டுத்து மற்றொரு கண்ணாடி ரோவில் வைக்கப்பட்டிருந்த ாம்மை யொன்றைக் காட்டி ர்.

"இந்த இரண்டும் என் ாழ்க்கைத் திருப்புமுனையின் டையாளச் சின்னங்கள். வைகளை நான் மறந்து டுவேனென்று கருதியதால் னவுக்காக வைத்திருக்க ல்லை! ஏனென்றால் நான் நடந் தறி வந்த பாதைகள் என் றன்றும் என் சிந்தனையை ட்டு அகல முடியாதவைகள். டுத்தவருக்கு அறிவுறுத்த வண்டிய தருணம் வருமா ன அப்போது இது பயன் ட்டு மென்பதற்காகவே ங்கே வைத்திருக்கிறேன். தைத் துடைக்கும் பணியை னே தான்மேற்கொண்டிருக்கி றன். இதைஉன்னால் நம்பவே டியாது.

சிறந்த குடும்பத்திலே றந்து-மிகச் சிறப்பாக வளர்ந் நல்ல செழிப்புற்றிருந்தேன். ப்போதெல்லாம் வீட்டில் சல்லப்பிள்ளையாக வளர்ந்து ந்தேன். ஏதாவது குறும்பு சய்தால் போலீசாரிடம் பிடித் க் கொடுத்துவிடுவே னன்று பயமுறுத்தினர்கள். னும் பயந்தே வாழ்ந்து வந் தன். அதன்பிறகு நான் ள்ளிக்குச் சென்றபோதும்- ற்றும் ஊர்விழாவிலே கலந்து காண்டபோதும், அதன் றகும் அதனால் ஏற்பட்ட நிலை ற்றத்தின் காரணமாக நான் வளியூர் சென்றிவிட்டபோ ம்-அதிலிருந்து எந்தெந்தத் றையிலே என் நாட்டத்தைச் சலுத்தி என்னை முழுக்க முக்க ஈடுபடுத்திக்கொண்ட மயங்களிலும்-ஒவ்வொரு சந் ர்ப்பங்களிலும் என் நிலை பற-துறைமாறக் காரணமா ருந்தது போலீசுதான்.

சிறுபோதில் போலிசைக் ண்டு அஞ்சிய நான், பள்ளி ணவனாக இருந்த சமயத்தில் ள்ளிக்கூட நுழைவு மறுப்பில் ன்னைப் போலீசு அடுத்த ாது முன் நினைவையும் தாடர்பு படுத்திக்கொண்டு ர்த்தபோது அவர்களுக்கு ரு ஆற்றல் இருப்பதாக ணர்ந்தேன். அதன்பின் ன் பள்ளிக்கூட நுழை ாயில்களைக்கூட மிதிக்கத் ரமற்றவனாக ஆகி விட்டேன். ரணம் போலீசாரால் நான் நமையான குற்றங்களுக்கு ரியவனென்று பதிவு செய் ப்பட்டு விட்டேன். எனவே தன்பயனால் வீட்டு நுழை ம எனக்கு வேற்று நினைவாகி ட்டது. ஊர்சுற்றியாக மாற வண்டிய நிலையை யடைந் தன். வெளியேறினேன். ப்போதாவது அமைதிபெற று அல்லது போலீசுதான் ன்னை அகன்று விட்டதா? ல்லை! போலீசாரால் ஒருநாள் ரவு கைது செய்யப்பட்டேன். தற்காகத் தெரியுமா? அவ் சில் திருட்டு முதலிய தீச் யல்கள் நிறைய நடைபெற் க் கொண்டிருந்த கால மாமது. ஆகவே தெருத் திண்ணையிலே படுத்திருந்த என்னைப் பிடித்துக்கொண்டு போனார்கள்.

ஏழைகளைக் குற்றம் சாட்டு வதே மிக எளிதான காரியம். அதிலும் ஏதும் கதியற்று-எனக்காக எந்தவிதச் சாட்சி யமுமற்று இருக்கும்நான் குற்ற வாளியாக்கப்படுவதா கடின மான கரியம்! அவர்களாலே சாட்டப்பட்ட குற்றப்பட்டிய லுக்கு என்னிடம் மறுப்பு மில்லை! ஆகவே சிறிது தண்ட னையையும் பெற்றேன். அதன் பிறகு என் வாழ்க்கையே ஒரு பெருஞ் சுழலுக்குள் பட நேர்ந் தது. அலுவல் நாடிச் செல்ல வேண்டிய நிலையடைந்தேன். என் செய்வேன்! வேலை; எண்ணியதும் கிடைத்துவிட அத்துணை எளிதான பொருளா? எங்கெங்கோ தேடி யலைந்தேன். இறுதியில் இந்த ரிக்ஷா இழுக்கும் பணியாள னாக மாறினேன். அங்கேயா வது நான் அமைதியைப் பெற்று விடுவேனென்றுதான் நம்பினேன். ஆனால் அவதி யைத்தான் அதிகம்பெற்றேன். அதிலும் போலீசுக்காரர்களை அடிக்கடி சந்திக்க நேர்ந்தது. நாள்தோறும் அவர்களுடைய முகத்தோற்றம் என் கண்முன் தோன்றாமலிராது, என்ன செய்ய முடியும். வண்டி இழுக்க வேண்டும், உணவுக்குரியபணம் ஏது? வண்டியின் சொந்தக்கார னுக்குத் தரவேண்டிய அளவு பணம் சேருவதே கடினம். அதிலும் போலீசுத் தேவதை யின் காணிக்கைக்கு வேறு போய்விட்டால் மீதி!

இப்படியே காலங் கழிந்தது. இனி கழிக்க முடியாத நிலையும் வந்து சேர்ந்தது. வண்டி பல முறை சார்ஜ் செய்யப்பட்டு விட்டதால், சொந்தக்கார னிடம் ஒவ்வொரு முறையும் இனி யவ்வாறுநடந்துகொள்ள மாட்டேனென்று கூறினேன். அவனும் சம்மதித்தான். இப் போதோ ஒருமுறை சார்ஜ் செய்யப்பட்டுவிட்டால் உத்தி யோகம் போய்விடும்! அத் துடன் வேறு விதியற்று திரு வோடேந்துவதைத் தவிர வகையில்லை, என் திகில் மறை வதற்குள் சார்ஜ் செய்யப்பட்டு விட்டேன். என்னை விடுவிக் கும்படி ஒவ்வொரு கடவுளையும் வேண்டினேன். அவைகள் என்னைப் போன்றவனுக்கு இதம் செய்யவாஇருக்கின்றன! என் போன்றாரின் குரலோ சாயலோ நிழலோ சென்று படிய முடியாத கற்கோட்டை களுக்குள்ளே யல்லவா அடை பட்டுக் கிடக்கின்றன. வீதி களிலும் குளக்கரைகளிலும் இருக்கும் கடவுள்களாவது கருணை செய்யட்டுமென்றால் எண்ணெயும் நீரும் எடுப்பான பூசனையும் செய்வோருக்கு வர மளிக்கும் வாக்குள்ள தெய்வங் களல்லவா அவைகள். தலைக்கு எண்ணெயும் தண்ணீரும் காட்டியறியாத நான் கல்லுப் படிமங்களுக்கு எண்ணெயூற்ற எங்கே செல்லுவேன். மேலும் அந்தக் கடவுள்களிடம் எனக்கு நம்பிக்கையில்லை! ஏனென்றால் என்னை வாட்டி வதைக்கும் கடவுள்கள்தான் அந்தக் கருணை வடிவங்களைக் காவல் செய்கின்றனர். ஆண்டவனை யும்-இன்னும் அநேக நீதி நிய மனக் கூடங்களையும் காவலிடு கின்றனர். ஆனால் என்போன் றோரைக் கால் கீழிடுகின்றனர். இவ்விதம் பலவேறு சிந்தனை களால் உழன்ற என் உள்ளத் தில் அங்கிருந்த பொம்மைக் கடை தென்பட்டது. ஓடோ டிச் சென்றேன். அங்கிருந்த ஒரு போலீசுப் பொம்மையைத் திருடிச் சென்றேன். சென்ற வன் அப்போது எனக்கு மாட மாளிகையாகவும் மந்தார நந்த வனமாகவு மிருந்த குடிசையி னுள்ளே வைத்துப் பூசித்துக் கொண்டிருந்தேன்.

"என் தெய்வம் நீ! உலகில் உன்னால் செயலாற்றக் கூடிய வைகளைக் கடவுளாலும் மறுக்க முடியவில்லை. கடவுள் சகல வல்லமையும் படைத்தவர் என்கிறார்கள். அவரையும் காக்க உன் வல்லமை தேவைப் படுகிறது. உலகை ரக்ஷிக்கிறான் ஆண்டவனென்கிறார்கள் அவ னும் உன் ஆணைக்கு அடங்கு கிறான். இப்போது என்னைக் காப்பாற்றவேண்டியது உன் கடன். இம்முறை நீ விட்டுவிட் டால் என் உத்தியோகம் நிலைக் கும் வாழ்வு கெடாமலிருக்கும்-கருணைசெய்" என்று கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தேன். வெளியிலிருந்து முத்தையா! என்ற அதட்டல் குரல் கேட் டது. ஏட்டு பொன்னுசாமிப் பிள்ளை தான் நின்று கொண்டி ருந்தார். அவர் கால்களில் விழுந்து கதறினேன். அய் யாவே நானஏழை! என் வாழ்க் கையில் உங்களினத்தவர் சம் பந்தப்படாத வகையே கிடை யாது. கடைசியில் இந்த நிலைக்கு வந்து விட்டேன். இன்று நான் சார்ஜ் செய்யப் பட்டு விட்டால் என் முதலாளி என்னை வேலையிலிருந்து நீக்கி விடுவான். பிறகு எனக்கிங்கு வேலையே கிடையாது. வேற் றூர் செல்லவும் இயலாது. இதை எண்ணிக் கடவுள்களின் காலடிகளை வருடினேன் கருணை பிறக்கவில்லை, இறுதியுல் உங் களையே கடவுளாக எண்ணிப் பிரார்த்திக்கவே இந்தச் சிலை யைத் திருடி வந்தேன். இதற் காகவே இப்போது என்னைப் பிடிக்க வந்திருக்கிறீர்கள். என்னை விட்டு விடுங்கள்."

என்று நான் கதறியபோது என்முதுகில்சிறு நீர்த்துளிகள் விழுந்தன. பொன்னுசாமி பிள் ளையின் கண்களிலே நீர் துளித் தது. அவர் அங்கிருந்து போய்விட்டார். அன்று முதல் பெரும்பாலும் அவரால் நான் பெற்ற சலுகைகள் அநேகம்!

என் முதலாளி என்னிடம் மிகுந்த பற்றுக் கொண்டவரா னார்! வண்டிகள் என் மேற் பார்வைக்கு வந்தன. அவர் வெளியூர் சென்றுவிட்டார். அதைத் தொடர்ந்து கொஞ் சம் கொஞ்சமாக முன்னேறி னேன். இந்த நிலைக்கு வந்து விட்டேன். போலீசாரும்-இரயி லில் டிக்கட் பரிசோதிப்பவர் களும் மனம் வைத்தால் இந்த நாட்டில் ஏழைகளே இல்லாது செய்துவிடலா மென்கின்றதத் துவத்தையே கண்டேன்."

இவ்விதம் நான் வளர்ந்த பிறகு பணத்தின்மேல் பணம் சேர ஆரம்பித்தது. பணம் படைத்த என நட்புறவு பலருக் கும் தேவைப்பட்டதே தவிர, என்னை யாரென்று சிந்தித்துப் பார்க்கத்தகுந்த நிலைமையாருக் கும் வரவில்லை! இப்படி வாழ்க் கையில் உயர்ந்ததரமென்று ஊரவர் கருதுகின்ற ஒரு நிலையை நானடைந்து விட்ட பின் ஒருநாள் அநாதையாக உன்னைக்காணப் பெற்றேன். உன் தந்தையை யாரென்றறிந் தேன். அவரும் இதேஊரில்தா னிருக்கிறார். உன் தாயார் இயற்கை யெய்தி விட்டாள். உன்னை வளர்க்கும் ஆவலிருந் ததே தவிர, வளர்க்கும் முறை மை நானறியேன். எனவேதான் வாழவகையற்று-பெரிய இட மாக இருக்கிறதே என நம்பி அலுவல் நாடிவந்த இவளை உன் தாயாக்கினேன். பணம் படைத்தவன் செயலுக்குத் தான் காரணம் கேட்காதே இந்த உலகம்! இவளை என் மனைவியென்றும்-உன்னை என் மகளென்றுமே நம்பிவருகிறது. நானும் அவளை என் மனைவி யென்று பிறர் கூறுவதால் கே டில்லை என்றிருந்தேனே தவிர அவளை மனதாலும் என் மனை வியாக எண்ணியதில்லை. எத் துணையோ முறை என்னிடமே அவள் வாதிட்டதுண்டு. அதற்கு அவள் இளமையே காரணம் என்றாலும், நானும் என் மதியை இழந்துவிட விரும்பவில்லை. அவளுக்கு இதமாக எடுத்துச் சொல்லி இளமை எழுச்சியை அடக்கி யாளும் வழிவகைகளையும் ஏற் படுத்திவிட்டேன்.

இப்போது எண்ணிப்பார். உன் தந்தை நானல்ல என்று கூறியவன் மனப்போக்கையும் இணைத்துப்பார். வையத்தார் வாழ்வின் போக்கைக் கணக் கிட்டுப்பார்.

என்றுகூறி அவளைத் தேற் றினான். அதன் பிறகு அவள் சென்று தன் காதலனை மன் றாடினாள். தன் தந்தை கூறி யதுபோலவே நடைமுறை களும் இருந்தன. முத்தையன் வந்து பேசவந்தபோது ஊரார் முன்னிலைக்குக் கொண்டுவந்து இழிவுபடுத்த நினைத்தான், கல்யாணியின் காதலன். ஆனால் முத்தையனா அதற்கு அயர்ந்து விடுபவன்? ஊரவ ரைக்கூட்டினான். தான்யாரென் கின்ற உண்மையை அனைவரும் கேட்டு அயரும்படி அறிவித் தான். அதன் பிறகு காதலில் தன்கயமை எண்ணத்தைக் கலந்தவனின் கருத்தை யாவ ரும் அறிய வெளியிட்டான்.

சாதிகள் நீங்க, சமுதாயம் வளர!

★

—(0)—

அரசாங்கத்தின் பொறுப்பு.

—(0)—

(நாஞ்சில். செ. அன்பெழில்)

★

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்ற பொதுமறையின் அரிய கருத்தை அடிப்படையாகக் கொண்டு தமிழகத்தில் சமுதாயம் அமைக்கப்பட்டிருந்தது. 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்ற திருமூலர் திருவாக்கும், 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற புலவர் பூங்குன்றனார் பொன்மொழியும் தமிழகத்தின் உயர்ந்த பண்பாட்டையும், விழுமிய நோக்கையும் விளக்கிக் காட்டுவன. அதன் பிறகுதான் சாதிகளின் பேரால் பிரிவினைகள் தமிழ் நாட்டில் புகுந்தன. சாதி என்ற சொல் தமிழ்மொழியில் இல்லாதிருப்பதே சாதி வேறுபாடு தமிழகத்திலே வந்து புகுந்ததே தவிர முன்னாள் தொட்டு வாழ்ந்து நிலைத்ததல்ல என்பதை விளக்கும். ஆனால் இன்று வேத, இதிகாச புராண, ஆகமங்களும், ஆச்சார அனுட்டானங்களும், சாத்திர சம்பிரதாய, சடங்குகளும் சாதி உணர்ச்சியின் வளர்ச்சிக்கும் நிலைபேற்றுக்கும் பெருமளவுக்குத் துணைபுரிகின்றன. மக்களுள் ஒரு சாராரை தாழ்த்தப்பட்டவர்கள் என்று ஒதுக்கி வைத்தும், தீண்டத்தகாதவர்கள் என்று கொடுமைப் படுத்தியும், நீசர்கள் என்று உதாசீனம் செய்தும் வருவது இன்றைய நாகரிக உலகத்தின் அவமானச் சின்னமாகும்.

உலக உத்தமர் காந்தியார் மேற்கொண்ட சில அரிய சேவைகளுள் பெரியது, தலையாயது தீண்டத் தகாதவர்களின் நல்வாழ்வுக்கு அவர் புரிந்த தொண்டேயாகும். தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியில் தன் உறைவிடத்தை அமைத்துக்கொண்டு அவர் வாழ்ந்தார். எனினும் சாதி வேறுபாடு நாட்டைவிட்டு அகலவில்லையென்றால் அதற்குக் காரணம் காந்தியாருக்குப் பின் ஆட்சிக்கு வந்த காங்கிரசுக் காரர்கள் சாதி வேறுபாடுகளை தம் கட்சியின் வளர்ச்சிக்குப் பயன்படுத்திக் கொண்டார்கள். அதன் எதிரொலிதான் அண்மையில் முதுகுளத்தூர் பகுதிகளில் நடந்த அமளி துமளிகள்.

கழிந்த இரண்டு பொதுத் தேர்தல்களின் போதும் காங்கிரசுக் கட்சி சாதி உணர்ச்சியை தனக்கு சாதகமான முறையில் பெருமளவிற்குப் பயன்படுத்தியிருக்கிறது என்றால் அதை யாரும் மறுக்க முடியாது. பண்டிதர் சவகர்லால் நேருவிலிருந்து சாதாரண காங்கிரசுத் தொண்டர் வரையுள்ள அத்தனை பேருடைய பேச்சுக்களும் வகுப்புவாதம் காங்கிரசுக் கோட்டையிலே வளமாக வாழ்கிறது என்பதற்கு சான்று பகரும்.

"சென்ற பொதுத் தேர்தல்களுக்கு காங்கிரஸ் அபேட்சகர்களைப் பொறுக்குகையில் சாதி பணம் ஆகியவை செல்வாக்கைப் பெற்றிருந்தன என்றும், பதவிக்கு ஆசைப்பட்டு காங்கிரசில் சேர்ந்த பலர் காங்கிரஸ் அபேட்சகர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர் என்றும் நாட்டின் பல பாகங்களிலிருந்தும் புகார்கள் வந்ததைக் கருத்தில் கொண்டு இந்தத் தடவை அத்தகைய புகார்களுக்கு இடமில்லாமல் செய்ய காங்கிரஸ் தலைமையினர் உறுதி கொண்டுள்ளனர். காங்கிரசில் தீவிர மெம்பராயிருந்து புரிந்த சேவைகள் சொந்த வாழ்விலும் பொதுவாழ்விலும் உள்ள ஒழுக்கம் இவை முக்கியமாக கவனிக்கப்படும்" என்ற காங்கிரசுத் தலைமையின கருத்தை 12—10—1955ல் தினமணி நாளிதழின் புதுடில்லி நிருபர் தெரிவித்துள்ளார். ஆனால் இரண்டாவது பொதுத் தேர்தலில் காங்கிரசு எந்த முறையில் பங்கேற்றது என்பது சட்டமன்றத்தில் இன்று கொண்டுவரப்பட்டுள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானம் விளக்கிக் காட்டுகிறது. சாதி சமய அடிப்படைகளில் அபேட்சகர்களை பொறுக்கி எடுத்து நிறுத்தி, சாதி உணர்ச்சியைத் தூண்டிவிட்டு அதன்மூலம் ஆதரவுதந்து, ஆளும் கட்சி என்ற செல்வாக்கின்மூலம் அதிக வாக்குகளைப் பெற்று கொலுவேறியது. அன்று தூண்டிவிட்ட சாதி உணர்ச்சி தான் இராமநாதபுர மாவட்டத்தில் கொழுந்து விட்டெரிந்து பல உயிர்களையும் பலிவாங்கி, பல்லாயிரக் கணக்கான ரூபாய் மதிப்புள்ள பொருட்களுக்கு சேதமும் உண்டாக்கியது.

உணவு விடுதிகளிலும், விற்பனை நிலையங்களிலும் பிற இடங்களிலும் சாதியின் பெயரால் விளம்பரப் பலகைகளை தொங்கவிடுவது கூடாது என்ற கொள்கையை அடிப்படையாகக்கொண்டு பெரியார் அவர்கள் சென்னையிலும் பிற இடங்களிலும் போராட்டம் நடத்தி வருகிறார். அவருடைய பெரு முயற்சியால் வெற்றியும், பலத்த ஆதரவால் ஆட்சிப் பொறுப்பும் பெற்ற திரு. காமராசர் பெரியார் அவர்களின் குரலைக் கேட்டும் கேளாதவராகவே இருக்கிறார்! அண்மையில் கேரள அரசாங்கம் பொதுவிடங்களில் சாதிப் பெயர்களை நீக்க அறிக்கையொன்று வெளியிட்டுள்ளது. 1957 அக்டோபர் 27ல் திருவனந்தபுரத்தில் வெளியான கேரள அரசாங்க அறிக்கையொன்று, "சாதிப்பெயர்களைக் குறிக்கும் விளம்பரப் பலகைகளை உணவுவிடுதிக்காரர்களும் கடைக்காரர்களும் தங்கள் நிலையங்களிலிருந்து அகற்றிக் கொள்வார்கள் என்று அரசாங்கம் நம்புகிறது. அங்ஙனம் அகற்றப்படவேண்டும் என்று பொதுமக்கள் விரும்புவதை அவர்கள் உணர்ந்து தாங்களாகத் திருத்திக் கொள்வது நல்லது. விளம்பரப் பலகைகள் மாற்றப்படாததால் அனுமதிச் சீட்டுகள் (லைசன்சுகள்) வழங்க முடியாது என்று அரசாங்கம் கட்டாயப் படுத்தும் அளவுக்கு உணவுவிடுதிக்காரர்கள் அடம்பிடிக்க மாட்டார்கள் என்று அரசாங்கம் நம்புகிறது. உணவுவிடுதி உரிமையாளர்களுக்கு நல்ல மனோ நிலை ஏற்படும் என்று எண்ணுகிறோம்" என்று கூறுகிறது.

தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் தனிச் சலுகைகள் தந்துவிடுவதால் அவர்களுடைய பிரச்சினை தீர்ந்து விடுகிறது என்று எண்ணி இன்றைய ஆள்வோர் ஏமாந்து கொண்டிருக்கின்றனர். உயர்ந்தோன் தாழ்ந்தோன் என்ற நிலைமை மாற வேறு பல துறைகளில் பணியாற்ற அரசாங்கம் முன் வர வேண்டும். குறிப்பாக கலப்பு மணங்கள் நாட்டில் ஏராளமாக நடைபெற வேண்டும். அதற்கு அரசாங்கத்தின் குன்றாத ஆதரவும் குறையாத ஒத்துழைப்பும் என்றும் வேண்டும், சென்ற ஆண்டில் வெளியான பீகார் அரசாங்க அறிக்கை ஒன்று கலப்பு மணங்கள் பெருகுவதற்கு வாய்ப்பு அமைத்துத் தருகிறது. "உயர்ந்த சாதியைச் சேர்ந்தவரொருவர் தாழ்ந்த சாதியில் ஒருவரைத் திருமணம் செய்து கொண்டால் அவருக்கு ஆணானாலும் சரி பெண்ணானாலும் சரி உடனடியாக 2000 ரூபாய் வழங்கப்படும். அவர்களுக்குக் குழந்தை பிறந்ததும் மேலும் 1000ரூபாய் அளிக்கப்படும். உயர்ந்த சாதியைச் சேர்ந்தவரொருவர் மலைவாசியை மணந்து கொண்டால் அவருக்கும் இந்தச் சலுகை வழங்கப்படும்." என்று அறிக்கையை வெளியிட்டதோடு அதற்கான தொகையை பீகார் அரசு பாட்னா பல்கலைக் கழகத்தாரிடம் ஒப்படைத்திருக்கிறது ஒப்படைத்திருக்கும் தொகையை கலப்பு மணம் செய்து கொள்ளும் பட்டதாரிகளுக்கு வழங்குமாறும் அரசாங்கம் பல்கலைக் கழகத்தைப் பணித்திருக்கிறது.

சாதி பேரால் காட்டப்படும் வேறுபாடுகளைக் களைவதற்காக ஆந்திர அரசாங்கம் வேறொரு முறையில் பணியாற்ற முயல்கிறது. "ஒவ்வொரு ஆதித்திராவிட பையனை எடுத்து வளர்க்க முன்வரும் ஒவ்வொரு இந்துக் குடும்பத்தினருக்கும் ஒவ்வொரு ஆண்டும் ரூபாய் 500 செலவுக்கென்று அளிக்கப்படும். ஒவ்வொரு மாவட்டத்திலும் முதன்முதலில் ஒருமாதிரி குடியிருப்பு அமைக்கப்படும், அதில் நூற்றுக்கு 75 ஆதித் திராவிடக் குடும்பங்களும் 25 உயர் சாதிக் குடும்பத்தினர் என்போரும் சேர்ந்து வாழும்படி செய்யப்படும். ஒவ்வொரு குடியிருப்பு இடமும் ரூ. 1,30,000 செலவில் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது" என்று கர்நூலிலிருந்து சென்ற ஆண்டில் வெளியான செய்தி ஆந்திர அரசாங்கம் மேற்கொண்டுள்ள சிறந்த பணியை சித்தரித்துக் காட்டுகிறது.

ஒதுக்கப்பட்ட வகுப்பினர் நலன்களுக்காக 26—10—1957இல் திருவனந்தபுரத்தில் துணை ஆணையாளர் அலுவலகம் ஒன்றை டில்லி அரசாங்க உள்விவகார துணையமைச்சர் திருமதி. வயலட் ஆல்வா, கேரள முதல்வர் திரு. நம்பூதிரிபட் தலைமையில் துவக்கிவைத்தார். அந்த விழாவில் பங்கேற்று சொற்பொழி வாற்றிய கேரள சட்ட அமைச்சர், சாதி

~~~~~~

...எல்லோரும் அவன் செயலைக் கண்டித்தனர்.

இத்தகைய நிகழ்ச்சிகளுக்குப்பின் கல்யாணியை ஏற்றுக் கொள்வதாகத் துடித்தான் அவள் காதலன் முத்தையன். அதற்கு இணங்கவில்லை. கல்யாணியும் அவனது செயல்களை நன்குணர்ந்து கொண்டபின், நடிப்பால் தனது வாழ்க்கையை நடத்திச் செல்ல இருந்தவனின் நயவஞ்சக நெஞ்சத்தை மறந்தாள்-மறுத்தாள்.

முத்தையனின் விருப்பத்தின்படியே அவளுக்குத் திருமணம் நிறைவேறியது! அவளது உண்மைத் தந்தையும் ஒன்று சேர்த்து வைக்கப்பட்டார். அவர்களெல்லோரும் இன்புற்றிருப்பதைக் கண்டு மகிழ்ந்திருந்தார் முத்தையன். இவ்வளவு சிறந்த குணமும்-உயர்ந்த பண்பாடுகளும் நிறைந்து விளங்கும் முத்தையனை அனைவரும் காண விழைந்தனர். "அவன் யார்" என்றறிந்து மகிழ்ந்தனர். ○
~~~~~~

மயங்களால் ஏற்படும் கேடுகளை நீக்குவதற்கு சில நல்ல கருத்துக்களை வெளியிட்டுள்ளார். "கேரள அரசாங்கம் ஒதுக்கப்பட்ட மக்கள் நலங்களுக்கான தொகையை மேலும் நூற்றுக்கு ஐம்பது கூடுதலாக தரவேண்டுமென்று மத்திய அரசாங்கத்தை வேண்டியுள்ளது. தீண்டப்படாதவர்களுக்கு தனிச்சலுகைகள் தந்துவிடுவதால் மட்டும் அவர்கள் பிற சாதியினர்க்குச் சமமாக உயர்ந்து விடமாட்டார்கள். அவர்களை தனி சாதியினராக ஒதுக்காமலிருக்க சில புதிய நிலைமைகளை உருவாக்க வேண்டும். கலப்பு மணங்கள் ஏராளம் நடைபெற்றாக வேண்டும். உயர் சாதியிலுள்ள ஆண்களும் பெண்களும் கலப்புமணத்திற்கு முன்வர வேண்டும். அந்தக் கலப்பு மணங்களை ஊக்கப்படுத்தி நிதியளிப்புகள் வழங்கவேண்டும். சாதிஉணர்ச்சியை ஒழிக்க இதுவே சிறந்த வழி" என்ற அவர் கருத்து சென்ற ஆண்டிலிருந்தே பீகாரிலும்-ஆந்திரத்திலும் செயல்பட்டு வருகிறது. ஆனால் தமிழகத்தில் ......? நினைத்தாலே வெட்கித் தலைகுனிய வேண்டிய சில செயல்கள் சென்னை மாநிலத்தில் நடக்கின்றன, அரசாங்கத்தால் நடத்தப்படுகின்றன.

ஏறத்தாழ ஓராண்டுக்கு முன்னர் சென்னை மாநில அரசு 5,000 ரூபாய் செலவில் 30,125 சுவரொட்டிகளைத் தயார் செய்து, சாதியால் ஏற்படும் இழிநிலையைத் துடைக்க முன்வந்தனர். தாழ்த்தப்பட்ட வகுப்பினர் ஒருவரை, உயர்ந்த சாதிச்சின்னங்களான பூணூலும், குடுமியும் கொண்ட ஒரு உயர் சாதியைச் சார்ந்தவர் "ஒதுங்கி நில்!" என்று சொல்லி கொடுமைப் படுத்தும் காட்சியும், அதன் விளைவாக அவர் அரசாங்கத்தால் சிறைப்படுத்தப்பட்ட காட்சியும் சித்தரிக்கப்பட்டிருந்தன. சுவரொட்டிகள் ஒரு சில சென்னை உட்பட்ட ஒரு சில இடங்களிலே ஒட்டப்பட்டன. சுவரொட்டியைப் பார்த்த பார்ப்பனர்கள் சிலர் வெகுண்டெழுந்தனர். திருச்சியிலே ஒரு கூட்டம் கூடி குடுமியும் பூணூலும் பார்ப்பனர்களைக் குறிப்பதாக கருதிக்கொண்டு, கண்டனத் தீர்மானம் நிறைவேற்றியது. 'இந்து' நாளிதழ் துணைத் தலையங்கம் ஒன்று தீட்டி அரசாங்கத்தைத் தாக்கியது. பெரியார் அவர்களால் பார்பனீயத்தின் வைரி என்று இன்னும் பாராட்டப்படும் காமராசர் திகைத்தார், நடுநடுங்கினார். சுவரொட்டிகள் அனைத்தும் திரும்பப் பெறப்பட்டன. இன்று காங்கிரசு அணியிலே இடம்பெற்றிருக்கும் திரு. விநாயகம் அன்று சட்டமன்றத்திலே "உச்சிக்குடுமியும்பூணூலும் பார்ப்பனருக்கு மட்டுந்தானா? வன்னியகுல சத்திரியரிலேசிலருக்கும், ஆசாரி குலத்திலே சிலருக்கும் இல்லையா?" என்று கேள்வி கிளப்பினர். அரசாங்கம் 'காமராசர்' ஆனது. அரசாங்கம் விட்ட பணியை அதே சுவரொட்டியை ஆயிரக் கணக்காக அச்சடித்து நாடெங்கும் ஒட்டியதின் மூலம் தி. மு. க. நிறைவேற்றியது. இது சாதி ஒழிக்க சல்லடம் கட்டி முன்வந்த திரு. காமராசர் சரணாகதி அடைந்த படலத்தை விளக்கிக் கூறுகிறது.

சென்ற ஆண்டு பெப்ரவரி திங்களில் சென்னை ஆளுநராக பணியாற்றிய திரு. பிரகாசா அவர்கள் திருச்செங்கோடு சென்றிருந்தார். அப்போது அங்குள்ள ஊராண்மைக் கழக உறுப்பினர்கள் ஒன்றுசேர்ந்து ஆளுநரோடு இருந்து புகைப் படம் எடுத்துக் கொண்டனர். மக்கள் பிரதிநிதி என்ற வகையில் ஊராண்மைக் கழக உறுப்பினரான ஒரு ஆதித்திராவிட தோழருக்கு அந்தப் புகைப் படத்தில் இடம் பெறும் உரிமை மறுக்கப்பட்டது. அப்போது அங்கே வீற்றிருந்த ஆளுநர் இது குறித்து எவ்விதக் கருத்தும் தெரிவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. சென்ற சட்டமன்றத்தில் திரு. அர்த்தநாரி அவர்கள் இது குறித்து கேள்வி கிளப்பியுள்ளார்.

முந்திய சட்டமன்ற கூட்டத்தில் வரவு செலவு திட்டம் பற்றிய விவாதத்தின் போது பின்தங்கிய வகுப்பார் பற்றிய பட்டியலில் இசைவேளாளர், மருத்துவர், மேளக்காரர் என்று பல வகுப்பினரைக் குறிப்பிடும் பொழுது சாணான், வண்ணான், குயவன் என்றெல்லாம் அச்சிடப்பட்டிருப்பதைச் சாணார், வண்ணார், குயவர் என்று மாற்றியமைக்கலாமா? என்ற கருத்துப்பட கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் ஒரு கேள்வி எழுப்பினார்கள். வினாவுக்கு பதில் தர முன்வந்த நிதிக்கும் மதிக்கும் அமைச்சரான திரு. சுப்பிரமணியம் தமிழ் இலக்கன அறியாமையை தம்பட்டம் போட்டுக் காட்டியதோடு 'ன்' என்றிருப்பதால் மதிப்பு ஒன்றும் குறைந்துவிடாது என்று மமதையோடு கூறினார். தாழ்த்தப்பட்ட இனத்தவரை மதிப்போடு அழைப்பதும், விளிப்பதும்கூட அமைச்சருக்கு வேதனை தருவதாக இருக்கிறது.

இது போல சாதிவேறுபாடுகளின் நிலைபேற்றில் சென்னை அரசாங்கம் அதிக அக்கறை கொண்டுள்ளதற்கு எத்தனையோ பல சான்றுகளை எடுத்துக்காட்ட முடியும். வகுப்பு வெறியின் வளர்ச்சிக்குத் துணை நின்றதன் விளைவுதான் முதுகுளத்தூர் கலவரம். வடநாட்டிலே சாதி சமய வேறுபாடுகளால் கொலை கொள்ளைகள் நடந்துகொண்டிருந்த நாட்களிலே தென்னகம் நேசக்கரம் கோர்த்து பாசத்தோடுறவாடும் மக்களைக் கொண்டு திகழ்ந்தது, பெருமையும் பெற்றது. ஆனால் இன்று நவகாளியையும் அதைப் பயன் படுத்திக் கொண்டுவந்த ஜாலியன்வாலா பாக்கையும் சந்தித்து, பிறராலும்சிரித்துஒதுக்கப்படவேண்டிய நிலையிலே சிக்கிக் கொண்டிருக்கிறது. சாதி உணர்ச்சியை வளர்க்கின்ற பணியைத் தான் மேலும் அப்பகுதிகளிலே ஊட்டி வருகின்றனர். 'இந்த இழி நிலையை திராவிட முன்னேற்றக் கழகம் வன்மையாகக் கண்டிக்கிறது. இந்த நிலைமாறி 'எல்லோரும் ஓர் இனம், எல்லோரும் ஓர் குலம்' என்ற நன்னிலை அடையவேண்டுமென்பது நமது கழகத்தின் விழைவு. இழிவு கொண்ட மனிதர் என்பவர் இவ்வுலகில் இல்லையே என்ற நிலைமை ஏற்படவேண்டும்.

"ஓடும் உதிரத்தில்—வடிந்து
ஒழுகும் கண்ணீரில்
தேடிப்பார்த்தாலும்—சாதி
தெரிவதுண்டோ அப்பா!"

என்று கவிமணி தேசிக விநாயகம் கேட்கிறார். சாதிச் சண்டையில் அலைக்கழித்து இருக்கும் சமுதாயத்தைப் பார்த்துக் கேட்கிறார், நம்மையெல்லாம் பார்த்துக் கேட்கிறார்!

சாதி பேதமற்ற சமூகத்தை என்று நாம் காண்கிறோமோ அன்றுதான் உண்மையான சுதந்திர உரிமை நாட்டில் நிலவுவதாகக் கருதமுடியும்!

[illegible]

"இந்தப் பத்து ஆண்டுக் காலமாக—நான் கேட்கிறேன்—நீங்கள் இந்தத் துப்பாக்கிப் பிரயோகத்தைப் பயன்படுத்தும் அளவிற்கு எந்த ஜனநாயக சர்க்காராவது பயன்படுத்தி இருக்கிறதா? நீங்கள் வணங்கும் ஆண்டவன் பெயரால் கேட்கிறேன்—நீங்கள் கடைப்பிடிக்கும் காந்தீய நெறியின் பெயராலும் கேட்கிறேன்—உங்கள் நெஞ்சிலே கைவைத்துச் சொல்லுங்கள்—இத்தனை ஆண்டுக் காலமாக நம் நாட்டிலே நடந்த துப்பாக்கிப் பிரயோகம் உலகத்தில் எந்த நாட்டிலாவது இந்த அளவுக்கு நடந்ததுண்டா? நீங்கள் இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் நடத்துவதை நாங்கள் கண்டித்தால், உடனே போலீஸ் அமைச்சர், 'நாங்கள் இங்குமட்டுமா துப்பாக்கிப் பரயோகம் நடத்தினோம்; இதற்கு முன்னமேயே தூத்துக்குடியில் நடத்தினோம்—டால்மியாபுரத்தில் நடத்தினோம்—வால்பாறையில் நடத்தினோம்—பைத்தியக்கார மக்களே! இதுதானே எங்கள் வேலை; இப்போது முதுகுளத்தூரில் சுட்டதற்கு நீங்கள் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்தீர்களே' என்று சொல்லுவார்கள்.

"ஆம்! இன்னும் இந்த ஐந்தாண்டு ஆட்சிக் காலத்தில் எத்தனை முறை இந்தத் துப்பாக்கித் தோட்டாக்களைப் பயன்படுத்தப்போகிறீர்களோ? யார் யார் பலியாக இருக்கிறார்களோ என்று எண்ணி வேதனைப்படுகிறேன், அதனால்தான் உங்கள்மீது எங்களுக்கு நம்பிக்கை இல்லை என்று சொல்லுகிறேன்."

"நான் பத்திரிகையில் பார்த்தேன்—துருக்கி நாட்டில் ஒரு கட்சி ஆட்சிக்கு வந்ததற்கு, அந்தக் கட்சிக்கும் மற்றொரு கட்சிக்கும் தகராறு மூண்டு ஏறக்குறைய 7,000 பேர்—கலகத்தில் ஈடுபட்டவர்கள்—ஆர்ப்பாட்டம் செய்தார்கள். அந்தக் கூட்டத்தைக் கலைக்க துருக்கி சர்க்கார் உபயோகப்படுத்தியது துப்பாக்கியை அல்ல; அவர்கள் மீது தண்ணீரை இறைத்துக் கலைத்திருக்கிறார்கள்."

"அங்கே ஏராளமான கூட்டம் பெரும் கலகம் விளைவித்தபோதிலும், அந்த சர்க்கார், தீயணைக்கும் படையின் உதவியினால், கலகத்தைத் தடுக்க அந்த மக்கள் மீது தண்ணீர் இறைத்துத் துரத்தியிருக்கிறார்கள்."

"ஆனால் இங்கு நடந்ததோ என்னவென்றால், கூட்டத்தைக் கலைப்பதற்குத் துப்பாக்கியை உபயோகப்படுத்தியிருக்கிறார்கள். கீழத்தூவலில் நடந்த சம்பவத்தில் 5 பேரைச் சுட்டிருப்பதாகச் சொல்கிறார்கள்; இதற்காகப் போலீஸ் படை சென்றிருக்கிறது. சுடுவதற்கு அனுப்பப்பட்ட அதிகாரியும், சுடுவதிலே பழக்கப்படாதவர் அல்ல—அதில் கைதேர்ந்தவர்; ஆனால் சுடுவது மிருகங்களையோ பறவைகளையோ அல்ல—மக்களை என்று நினைவில் கொள்ளவேண்டும்."

"ஆனால் அடுத்த குண்டு யார் பேரில் பாயும்; இந்த ஐந்து வருடங்களுக்குள் யார்யார்மேல் குண்டு பாயப் போகிறது; எத்தனை துப்பாக்கிப் பிரயோகம் செய்யப் போகிறார்களோ; எத்தனைபேர் அதனால் உயிர்நீங்கப் போகிறார்களோ; எந்த இடங்களில் துப்பாக்கிப் பிரயோகம் நடக்க இருக்கிறதோ என்று எண்ணிப் பார்க்கும் போது, இந்த அமைச்சரவையின்மீது நம்பிக்கையில்லை என்று சொல்லத் தோன்றுகிறது."

—சட்டசபையில் அறிஞர் அண்ணா.

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும்? அங்கே பரத்தை உங்களைக் காணாமல் தேடி அலைந்து கொண்டிருப்பாள். விரைவாக அங்கேயே செல்லுங்கள்! இந்த வீட்டிற்குள் நுழைய வேண்டாம்!" என்று சொல்லிவிட்டு வீட்டின் கதவைத் தாழ்ப்பாள் போட்டுக் கொண்டு உள்ளே சென்று விடுகிறாள்.

தலைவன் வேறு வழியில்லாமல் வாட்டத்தோடும், வருத்தத்தோடும் திரும்புகிறான்!

* * *

இது நற்றிணை-230 ஆம் செய்யுளின் கருத்தின் அடிப்படையில் எழுந்த சொல்லோவியமாகும். இந்தச் செய்யுள் மருதத்திணையைச் சார்ந்த 'தோழி வாயில் மறுத்தது,' என்னும் பிரிவைச் சேர்ந்ததாகும். இதனை இயற்றியவர் **ஆலங்குடி வங்கனார்** என்ற புலவராவார். இவர் ஆலங்குடி என்னும் ஊரைச் சேர்ந்த வங்கனார் என்று தெரிய வருகிறது. ஆலங்குடி என்னும் பெயரில் பல ஊர்கள் இருக்கின்றன. இவர் எந்த ஆலங்குடியைச் சேர்ந்தவர் என்று திட்டவட்டமாகக் கூற முடியவில்லை. பரத்தையிற் பிரிவைப்பற்றி இவர் சிறக்கப் பாடியுள்ளார். இவர் பாடியனவாக நற்றிணையில் மூன்றும், குறுந்தொகையில் இரண்டும், அகத்தில் ஒன்றும், புறத்தில் ஒன்றுமாகப் பாடல்கள் கிடைத்திருக்கின்றன.

முயப்பிடிச் செவியின் அன்ன பாசடைக்
கயக்கணாக் கொக்கின் கூம்புமுகை அன்ன
கணைக்கால் ஆம்பல் அமிழ்துநாறு தண்போது
குணக்குத்தோன்று வெள்ளியின் இருள்கெட விரியும்
கயற்கணங் கலித்த பொய்கை ஊர
முனிவில் பரத்தையை என்துறந்து அருளாய்
நனிபுலம்பு அலைத்த வேலை நீங்கப்
புதுவறங் கூர்ந்த செறுவில் தண்ணென
மலிபுனல் பரத்தந் தாஅங்கு
இனிதே தெய்யநின் காணுங் காலே

[நற்றிணை-230]

[பொழிப்புரை : நெருங்கிய பிடியானையின் செவி போன்ற பசிய இலையையும், குளத்தின்கண் உள்ள அழகிய கொக்குபோலக் கூம்பிய முகையையும், அவற்றிற் கொத்த திரண்ட தண்டினையுமுடைய தாமரையின் அமிழ்துநாறும் மெல்லிய மலர் விடியற்காலையில் கீழ்த்திசையின் கண்ணே தோன்றுகின்ற வெள்ளியைப்போல இருள் கெட மலராநிற்கும் கயல்மீன் கூட்டம் செருக்கிய பொய்கையையுடைய ஊரனே! என்னைக் கைவிட்டுச் சிறிதும்நின்பால் சினங் கொள்ளாதிருக்கின்ற பரத்தையைத் தலையளிசெய்து அங்கேயே உறைவாய் ஆக; நான்உன்னிடத்து சினங் கொண்டுள்ளாமையால் உன்னால் எப்பொழுதும் தலையளி செய்யத்தக்கவள் அல்லள்; கோடையிலே மிகத் துன்பப்பட்டபோது அக்கோடை வெப்பம் நீங்குமாறு புதுவதாக வற்றிக் காய்ந்து வெடிப்புமிக்க வயலிலே குளிர்ச்சியுற நிறைந்த புதுநீர் வெள்ளம் பரவினாற்போல வந்த உன்னைக் காணும் பொழுதெல்லாம் இனிமையாகவே இருக்கின்றது; அக்காட்சி ஒன்றே போதும்; ஆதலாலே என் மனையின் கண்ணே வாராதே, போய்விடு.

முயத்தல்-நெருங்கல்; பிடி-பெண்யானை; பாசடை - பசியஇலை; கயம்-குளம்; முகை-மொட்டு; கணை-திரட்சி; ஆம்பல்-அல்லி; குணக்கு-கிழக்கு; வெள்ளி-வெள்ளி என்ற கோள்.]

* * *

பரத்தை வீட்டிற்குச்சென்று திரும்பும் தலைவனை ஒழுக்கக் கேடனாகக் கருதி, அவனை ஏற்றுக் கொள்ள மறுத்து, அவனை வெளியே துரத்தும் தலைவியின் பாங்கு நன்கு இச் செய்யுளில் எடுத்துக் காட்டப் பெறுகிறது.

"உன்னைக் காணும்போதெல்லாம் இனிமையாகவே இருக்கின்றது. அக்காட்சி ஒன்றே போதும்!" என்று தலைவி தலைவனைப் புகழ்வது போல் இகழ்ந்து கூறுகிறாள்.

அல்லியின் இலைக்கு யானையின் செவியையும், கூம்பியமுகைக்குக் கொக்கின் தலையையும், தண்டுக்குக் கொக்கின் கழுத்தையும், கயல் மீனுக்கு வெள்ளிக் கோளையும் காதலனால் கைவிடப்பட்ட காதலிக்குக் காதலனைக் காணும்போது ஏற்படும் இனிமைக்கு, கோடையிலே வெடித்துக்கிடக்கும் வயலில் புதுநீர் பாய்ந்து குளிர்ச்சி செய்வதையும் உவமைகளாகக் கூறியிருப்பது போற்றுதற்குரியதாகும். ○

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

வெட்டி இரத்தக்காயம் உண்டாக்குகிற அளவு இருந்தது!

இந்துஸ்தானி இருக்கிறதே, அது ஒரு இரண்டுகெட்டான் மொழி! காந்தியார் விளக்கப்படி "இந்துஸ்தானி, இந்திச் சொற்களையும் உருதுச் சொற்களையும் கொண்டதாய், தேவநாகரி, அரபி இரண்டுவகை எழுத்துக்களில் எழுதப்படுவதாய், எந்த ஒரு மதத்தினருக்கும் சாராத ஒரு மொழி!" இந்தி—உருது இரண்டுக்கும் இருந்த சண்டையைத் தீர்க்க காந்தியார் இந்துஸ்தானியை ஆதரித்தார். அது இரண்டு சாராரையும் சமாதானப் படுத்தாமல், இரண்டு சாராருக்கும் பிடிக்காத ஒரு மொழியாக இருந்தது.

இந்துஸ்தானி என்பது ஒரு மொழியைத் தனித்துப் பார்க்க வேண்டுமானால், பீகார் மாநிலத்தில் வழங்குகிற "காரிபோலி" என்ற மொழிதான் அதற்கு அடிப்படையாக உள்ளது. இலக்கண அமைப்பில் காரிபோலி இந்தியுடன் தொடர்புடையது அல்ல! காரிபோலி மொழியானது, இப்பொழுதுள்ள இந்தியை விடப் பழமையானது!

இந்திக்கும் பஞ்சாபிக்கும் எவ்வளவு ஒற்றுமை இருக்கிறதென்பதை, பஞ்சாபில் இப்பொழுதும் அந்த இரண்டு மொழிக் காரர்களுக்கும் இடையில் நடைபெறுகிற இரணகளத்தைப் பார்த்தே தெரிந்து கொள்ளலாம்! "எங்கள் பஞ்சாபிய மொழியைச் சாகவிடமாட்டோம்!" எனப் பஞ்சாபியர்கள் குமுறுகின்றார்கள். "எங்கள் இந்தி மொழியைக் காப்பாற்றியே தீருவோம்!" என இந்தி மொழிக்காரர்கள் சத்தியாக்கிரகம் செய்கிறார்கள். அரசாங்கக் கணக்கில் காட்டுகிறபடி, இந்தியும் பஞ்சாபியும் ஒரே மொழியென்றால், இவ்வளவு விரோதங்கள் வெறுப்புகள், சண்டை சச்சரவுகள் ஏற்படக் காரணமில்லை!

இந்திக்கும் பஞ்சாபிக்கும் ஏற்பட்டுள்ள சச்சரவு இப்பொழுது திடீரென்று மூண்டதல்ல! 1951இல் மக்கள் தொகைக் கணக்கெடுக்கப் பட்டபொழுதே, இந்தி—பஞ்சாபி சண்டை அலைமோதியது, 1951 மக்கள் தொகைக் கணக்கைப்பற்றி, அது முடிந்ததும் டில்லி மக்கள் சபையில் விவாதம் எழுந்தபொழுது, அப்பொழுது அங்கு உள்நாட்டு மந்திரியாக இருந்த திரு. சி. இராசகோபாலாச்சாரியார் அவர்கள் கீழ்க்கண்டவாறு சொன்னார் :

"மக்கள் கணக்கு எடுக்கப் பட்ட பொழுது, பஞ்சாபிலும் பெப்சுமாநிலத்திலும் தாய் மொழிபற்றி பலத்த சச்சரவுகள் மூண்டன. பஞ்சாபி மொழிக்குப் பதில் இந்தியைத் தங்கள் தாய்மொழியாகக் கொடுக்கும்படி இந்துக்களில் சிலர் தூண்டினார்கள். இதைச் சீக்கியர்கள் எதிர்த்தார்கள். பத்திரிக்கைகளிலும் பொதுக் கூட்டங்களிலும், தாய்மொழி பற்றி ஆவேசமான விவாதங்கள் கிளம்பின. அறிக்கைகளும் எதிர் அறிக்கைகளும் வெளிவந்தன, கொந்தளிப்பு உச்சநிலையை யடைந்து, 1951 பிப்ரவரி 10ந்தேதி ஜலந்தர் மாவட்டத்தில் ஒரு கிராமத்தில் இந்துக்களுக்கும் சீக்கியர்களுக்கும் நேரடியாகச் சண்டை மூண்டு, ஒருவரையொருவர் தாக்கிக் கொண்டனர். இந்தச் சண்டையில் ஒருவர் கொலை செய்யப்பட்டார். தாய்மொழி பற்றி பஞ்சாபில் எடுக்கப்பட்டுள்ள கணக்குகள் சரியானவையல்ல எனத் தோன்றுகிறது. பஞ்சாபிய மொழி, இந்தி மொழி இரண்டு பற்றியும் தரப்பட்டுள்ள விவரம் தவறுடையது!"

இதுபோல 1951 இலேயே பஞ்சாப் மொழி பேசுபவர்களில் பலரை இந்தி மொழியாளர்கள் எனக் கொண்டுவரப் பஞ்சாப் மாநிலத்தில் பெரு முயற்சிகள் செய்யப்பட்டிருக்கின்றன. அது இரத்தம் சிந்துமளவு சச்சரவுகளைக் கிளப்பி விட்டிருக்கிறது, ஒருவர் படுகொலைக்கு ஆளானார். இவ்வாறு பஞ்சாப்—இந்திச் சண்டை நீண்ட காலமாகவே இருந்து வந்திருக்கிறது.

இந்தி, உருது, இந்துஸ்தானி, பஞ்சாபி ஆகிய நான்கு மொழிகளையும் ஒன்றாக்கி, அரசாங்கம் கணக்கெடுத்தது சரியல்ல! அவைகள் ஒவ்வொன்றும் தனிப்பட்ட மொழிகள். உருது மொழிக்காரன் இந்தியுடன் உருதுவை இணைக்க விரும்பமாட்டான்! பஞ்சாபிக்காரன் தனது பஞ்சாபி மொழியை இந்தியுடன் சேர்த்து விடச் சம்மதிக்கமாட்டான்! சதுரவடிவில் ஒவ்வொரு மூலையில் ஒவ்வொன்றாக இருப்பது போல் இந்த மொழிகள் இருக்கின்றன! எல்லோரையும் ஒன்றாக்கி, இந்திமொழி பேசுவோர் எண்ணிக்கைப் பெரும்பான்மை எனக்கூறுவது தவறு!

இந்தி மொழி பேசுபவர்கள் தொகையை மட்டும் நியாயமான முறையில் கணக்கிட்டிருந்தால், மொத்த மக்கள் தொகையில் 100க்கு 20லிருந்து 25க்கும் உள்ளாக இருக்கும். இந்த 100க்கு 20 பேர்கள்தாம் இந்தியா முழுமையும் ஆட்டிப் படைக்க முயல்கின்றனர்! ஐந்தில் ஒரு பகுதியினர், ஐந்தில் நான்கு பகுதியினரை அடிமையாக நினைப்பது ஏகாதிபத்திய வெறித்தன்மை என்பதைத் தவிர வேறெதுவாக இருக்க முடியும்? ●

வினா: சென்னை சட்ட மன்றத்தில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் வாக்கெடுப்புக்கு விடப்படும் போது தி. மு. க. சட்ட மன்ற உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தது சரியா?

விளக்கம்: தி. மு. க. சட்ட மன்ற உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்யவேண்டியதன் இன்றியமையாத சூழ்நிலை ஏன் ஏற்பட்டது என்பதற்கான காரண காரிய விளக்கங்களைத் தி. மு. க. மன்றக் கட்சித் தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள் தெள்ளத் தெளிய சட்ட மன்றத்திலேயே விளக்கிக் காட்டியுள்ளார்கள்.

எல்லாக்கட்சித் தலைவர்களும் அடங்கிய சட்டமன்ற நடப்புமுறை ஆலோசனைக் குழுவின் (Business Advisery Committee) கூட்டத்தில் முதுகுளத்தூர் பிரச்சினை பொறுத்து நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருவதா அல்லது பிரச்சினையைப் பற்றி விவாதித்து உண்மை நிலையை நாட்டுக்கு உணர்த்துவதா என்ற கேள்வி எழுந்தபோது எல்லாக் கட்சித் தலைவர்களும் பிரச்சினையைப் பற்றி விவாதித்து உண்மையை நிலைநாட்டுவதே போதுமானது என்ற முடிவுக்கு ஒரே மனதாக வந்துள்ளனர். முதுகுளத்தூர் பிரச்சினையைப் பொறுத்து அமைச்சரவை மீது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவர எண்ணி இருந்தவர் சட்ட மன்ற கா. சீ. க. தலைவர் தோழர் வி. கே. இராமசாமியார் ஆவார். அவரே பிரச்சினையைப் பற்றி விவாதித்து உண்மையைத் துலங்கச் செய்வதே போதுமானது என்ற முடிவுக்குப் பிறரோடு சேர்ந்து ஒருமுகப்பட்டு வந்துவிட்டார். முதுகுளத்தூர் பிரச்சினை விவாதத்திற்கு மட்டுமே கொண்டுவரப்படும் என்ற எண்ணத்தில்தான் அறிஞர் அண்ணாவும் பிற தி, மு. க. உறுப்பினர்களும் இருந்திருக்கிறார்கள்.

சட்டமன்ற நடப்புமுறை ஆலோசனைக் குழுக்கூட்டத்தில் அறிந்தோ அறியாமலோ கலந்துகொள்ளத் தவறிய சட்டமன்ற பொதுவுடைமைக் கட்சித் தலைவர் தோழர் எம், கலியாணசுந்தரம் அவர்கள், நடப்புமுறை ஆலோசனைக் குழுக்கூட்டத்தின் முடிவைப் பற்றிக் கவலைப் படாமல், அதனைப் புறக்கணிக்கும் விதத்தில் திடீரென்று சட்டமன்றத்தில் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை வலியுறுத்தத் தொடங்கினார். அந்தத் தீர்மானத்தை விவாதத்திற்கு எடுத்துக் கொள்வதா, இல்லையா என்ற நிலை ஏற்பட்டு, எடுத்துக் கொள்வதற்குத் தேவைப்படும் குறைந்த அளவு ஆதரவு வாக்குகளைச் சட்டமன்ற தலைவர் கேட்டபோது, முதுகுளத்தூர் பிரச்சினை எப்படியும் விவாதிக்கப்படவேண்டும் என்ற எண்ணங்கொண்ட தி. மு. க. உறுப்பினர்கள், தீர்மானம் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுவதற்கு ஆதரவாக வாக்களித்தனர். மற்ற எதிர் கட்சித் தலைவர்கள் நடப்புமுறை ஆலோசனைக்குழுவின் முடிவுபற்றிக் கவலைப்படாமல், நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை முழுக்க முழுக்க ஆதரிக்க முன்கூட்டியே தயாராகிக்கொண்டு விட்டனர் என்று அவர்களது பேச்சுக்களிலிருந்து தெரிய வருகிறது.

முறைதவறிப் போய்விட்டது என்றாலும், எதிர்கட்சிகளோடு இணைந்து இருந்து, அமைச்சரவை மீது நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு ஆதரவாக நிற்பது என்ற முடிவுக்கே அறிஞர் அண்ணா அவர்களும் பிற தி. மு. க. உறுப்பினர்களும் வந்திருக்கின்றனர். அறிஞர் அண்ணா அவர்கள் அந்தத் தீர்மானத்தின் மீது பேசும் போது, காங்கிரசு அமைச்சரவை மீது நம்பிக்கை தமக்கு இல்லாமல் போவதற்கான காரண காரிய விளக்கங்களை 30—10—57 சட்டமன்றக் கூட்டத்தில் அழகாகவும், அருமையாகவும், ஆணித்தரமாகவும் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். ஆனால் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை முன்மொழிந்து பேசிய பொதுவுடைமைக் கட்சித் தலைவர் தோழர் எம். கலியாணசுந்தரம் அவர்கள் அமைச்சரவை கடைப்பிடித்த கொள்கைகள்—நடவடிக்கைகள் அடிப்படையில் அமைச்சரவையின் மீது பொதுவாக நம்பிக்கையில்லாத் தன்மையைத் தெரிவிக்காமல், முதலமைச்சர் காமாராசர், உள்நாட்டு அமைச்சர் பக்தவத்சலம் ஆகியோரின் மீது தனிப்பட்ட முறையில் நம்பிக்கையில்லாத் தன்மையைத் தெரிவிப்பதுபோல் வலியுறுத்திப்பேசினார். குற்றத்திற்குத் தனிப்பட்ட இரண்டு அமைச்சர்களை மட்டும் ஆளாக்காமல், அமைச்சரவையையே பொதுப்படையாக ஆளாக்குவதுதான் முறையானது என்று அறிஞர் அண்ணா அவர்கள் பொதுவுடைமைக் கட்சித் தலைவரிடம் சொல்லிப் பார்த்திருக்கிறார்கள். அவர் அதனைப் பொருட்படுத்தாமல் இறுதியில் பேசும் போதும் இரண்டு அமைச்சர்களை மட்டுமே குற்றத்திற்குள்ளாக்குவது என்ற முறையில் பேசியுள்ளார். தீர்மானத்தைக் கொண்டுவந்தவரின் போக்கு மாறாததால், தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களிப்பது முன்மொழிந்தவரின் கூற்றுக்கள் அனைத்திற்கும் உடந்தையாக இருந்தது ஆகும், அது முறையாகாது, நீதியுமாகாது என்ற காரணத்தால்தான் தி. மு. க. உறுப்பினர்கள் வாக்கெடுப்பில் தீர்மானத்திற்கு ஆதரவாகக் கலந்து கொள்ள முடியாத சூழ்நிலை ஏற்பட்டது.

மேலும் சட்டமன்ற நடப்புமுறை ஆலோசனைக் குழுவில் செய்த முடிவுக்கு ஒப்ப விவாதம் புரிவதில் மட்டும் கலந்துகொண்டு, நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை வலியுறுத்த வேண்டிய தேவையில்லை என்ற நிலைக்கு தி. மு. க, சட்டமன்றக் கட்சி வரவேண்டியிருந்தது.

தீர்மானங்களைக் கொண்டுவந்து, சட்டமன்றத்தில் அவை பற்றி விவாதித்துப் பின் அவற்றை வலியுறுத்த வேண்டாம் என்ற நிலைக்கு ஒரு கட்சி வருவது புதிதாக நடைபெறும் ஒரு நிகழ்ச்சியல்ல. எல்லாக் கட்சிகளும் சிற்சில பொழுது, சிற்சில தீர்மானங்களைப் பொறுத்து அந்த முடிவுக்கு வரவே செய்கின்றன. இப்பொழுது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைப் பொறுத்து ஏற்பட்ட சூழ்நிலைகளை ஒட்டி, தி. மு. க. சட்டமன்றக் கட்சி நடுநிலைமை வகித்தது முறையானதொரு செயலேயாகும். முன்பு தேவிகுளம்—பீர்மேடு பற்றிய தீர்மானம் சட்டமன்றத்தில் வந்தபோது பொதுவுடைமைக் கட்சியினர் நடுநிலைமை வகித்தது இங்கு நினைவுகூறத்தக்கதாகும்.

முதுகுளத்தூர் கலவரங்களைப் பொறுத்து நீதி விசாரணை வைக்க வேண்டும் என்ற நியாயமான கோரிக்கையைக் கூட நிறைவேற்ற அமைச்சரவை மறுத்ததால், அதற்குத் தம் வெறுப்பையும், வருத்தத்தையும் உணர்த்த வேண்டி தி. மு. க. சட்டமன்ற கட்சியினர் வெளிநடப்பு செய்தனர். வெளிநடப்பு செய்தது ஆட்சியினரை எதிர்த்து மேற்கொள்ளப்பட்ட முறையான நடவடிக்கையாகும் என்பதையும், நடுநிலைமை வகித்த[illegible] கொள்கை அடிப்படை[illegible] முறையாகக் கடைப்பிடி[illegible] வந்த போக்கிற்கு ஏற்ப [illegible] கொள்ளப்பட்ட நடவடிக்[illegible] யாகும் என்பதையும் வி[illegible]வோர் உணர்வார்களாக!

—இரா.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நிருபரான ரோசன்தால் பின்வருமாறு மறுத்துள்ளார். "எனக்குத் தந்த பேட்டியின்போது திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் சொன்னவைகளை அப்படியே நான் வெளியிட்டிருக்கிறேன். அதில் எந்தத் தவறும் இல்லை. அந்தப் பேட்டியில் அவர் சொல்லியதைப்பற்றி கடுமையான விவாதம் எழுந்து ஆறு வாரங்கள்வரை அவர் எதுவும் தவறு கண்டுபிடிக்கவில்லை என்பது குறிப்பிடத் தக்கது. இப்பொழுதுகூட எந்த இடங்களில் அவரது கருத்துத் தவறாகப் போடப்பட்டிருக்கிறது என்பதை அவர் சுட்டிக்காட்டவில்லை. அவர் சொல்வதை அவருக்கு எதிரிலேயே நான் குறிப்பெடுத்துக் கொண்டேன். பொதுவுடைமையைப் பற்றி, நான் எதுவும் கேட்காமலேயே அவராகவே முன்வந்து சொன்னார். இப்பொழுது அவர் பேசியதற்குக் கண்டனமும் நெருக்கடியும் இருப்பதை அவர் உணர்வதாகத் தெரிகிறது. என்னைப் பொறுத்தவரையில் தவறு எதுவும் நிகழவில்லை. மற்றவற்றை அவர் மனச்சாட்சிக்கே விட்டுவிடுகிறேன்."

இந்தியாவின் நிதிமந்திரிக்கு மற்றொரு நாட்டுப் பத்திரிகை நிருபர் "மனச்சாட்சி" பற்றி போதனை செய்யும் நிலையில் இருக்கிறது. "மனச்சாட்சி" என்றால் என்னவென்று டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் கேட்கக் கூடும்!

இந்தியாவின் கௌரவத்தைத்தான் அடமானம் வைக்கச் சென்றாரென்றால், தனது சொந்த கௌரவத்தையும் அங்கு அடமானம் வைத்து விட்டுத் திரும்பவேண்டும்!

கீழ்க்கண்ட ஊர்களுக்கு மன்றம் வார இதழை விற்பனை செய்ய விற்பனையாளர்கள் தேவை.

1. அம்மாபேட்டை (தஞ்[illegible]
2. போடிநாயக்கனூர்
3. ஏரல்
4. ஏறம்பட்டி
5. குருவிக்குளம்
6. கவிந்திப்பாடி
7. காட்டுமன்னார் கோயில்
8. கோவில்பட்டி.
9. முக்கூடல்
10. மணச்சநல்லூர்
11. நன்னியூர்.
12. உதகமண்டலம்.
13. சந்தை-புதுப்பாளையம்
14. பொன்னமராவதி

விவரங்களுக்கு:

நிர்வாகி
மன்றம்.

"மன்றம்" அச்சகத்தில் (93, பிராட்வே, சென்னை-1. தமிழ்நாடு) ஆசிரியர், இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது. உதவி ஆசிரியர்: இரா. செழியன், எம். ஏ.—(தொலை பேசி எண்: 55